# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு2029 புரட்டாதி 19 திங்கட்கிழமை (05-10-1998) UTHAYAN- A Lively National Tamil Daily சுடர்:266


பொது சன நூலகம் 06 OCT 1998 மாநகர சபை யாழ்ப்பாணம்

## விமானத்தை மீட்கும் பணி தாமதமாகும்!

### புலிகளிடம் அனுமதி பெற முயற்சி

கொழும்பு, ஒக்டோபர் 5

இரணைதீவுக் கடற்பகுதியில் மூழ்கிய 'லயன் ஏயர்' பயணிகள் விமானத்தை மீட்கும் பணிகள் ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மன்னார் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இரணைதீவுக் கடற்பகுதியில் மூழ்கிய விமானத்தில் பயணம் செய்த பயணிகள் மற்றும் சிப்பந்திகளின் சடலங்கள் கரை ஒதுங்கி வரும் அதேவேளையில்—

விமானத்தை மீட்கும் பணிகளை மேற்கொள்ள இன்னும் தேடுதல்கள் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

விமானத்தை தேடும்பணிக்காக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவியுடன் 10 பேர் நேற்று மன்னார் போய்ச் சேர்ந்ததாகவும்—

விமானத்தைத் தேடும் பணியை அவர்கள் ஆரம்பித்துள்ளார்களா என்பது குறித்துத் தகவல் கிடைக்கவில்லை என்றும் — 'லயன் ஏயர்' கொழும்பு அலுவலக அதிகாரிகள் நேற்றிரவு தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் சந்தியிலிருந்து படையினர் நகர முயற்சி

### மோதலில் 10 புலிகள் பலி

வவுனியா, ஒக். 5

நேற்று முன்தினம் மாலை 4 30 மணியளவில் மாங்குளம் சந்தியில் இருந்து பிரதான வீதியின் இரு பக்கங்களாலும் முன்னேற முயன்ற படையினரை விடுதலைப் புலிகள் இடைமறித்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் எனவும்—

இந்தத் தாக்குதலில் விடுதலைப் புலிகளில் 10 பேர் உயிரிழந்தனர் எனவும்— விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இவர்களில் எட்டுப்பேரின் விவரம் வருமாறு,

★ பிரதிராஜ் (பூபால பிள்ளை கிருஷ்ணன் - மட்டக்களப்பு)

★ விஜிய கண்ணன் (சிவலிங்கம் காந்தரூபன் - மட்டக்களப்பு)

★ குணம் (கந்தசாமி சந்திரகுமார் - யாழ்ப்பாணம்)

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விமானசேவைத் தடையை நீக்க மொனறா கோரிக்கை

கொழும்பு, ஒக். 5

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் பயணிகள் விமான சேவை நடத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு மொனறா ஏயர் லைன்ஸ் நிறுவனம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

"லயன் ஏயர்" விமானம் ஒன்று கடலில் வீழ்ந்து மூழ்கிய சம்பவத்தை அடுத்து பாதுகாப்பு அமைச்சு இந்தத் தடையை விதித்திருப்பது தெரிந்ததே.

மொனறா ஏயர் லைன்ஸ் நிறுவனத்தின் பொது முகாமையாளர் சேனக ஹேரத் இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு செயலாளர் சந்திரானந்த டீ சில்வா, உள்நாட்டு விமானச் சேவைகள் மற்றும் உல்லாசப் பயணத்துறை அமைச்சர் தர்ம சிறி சேனநாயக்கா ஆகியோருக்குக் கடிதம் எழுதி உள்ளார்.

மொனறா ஏயர் லைன்ஸ் தலைவர் றொஹான் விஜேரத்தின கருத்துத் தெரிவிக்கையில் எந்த நேரமும் விமானச் சேவையை மீண்டும் ஆரம்பிக்க மொனறா ஏயர் லைன்ஸ் தயாராக இருப்பதாகக் கூறினார்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்காக 700 பேரும், யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்காக 800 பேரும் காத்திருப்பதாகவும்— வெளிநாடு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 17 வருடகால ஈழ யுத்தத்தில் கிளிநொச்சிதாக்குதல்பேரிழப்பு

### இராணுவ ஆய்வாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5

"கிளிநொச்சி மீது புலிகள் நடத்திய தாக்குதல், 17வருடகால யுத்தத்தில் அரச படைகளுக்குப் பேரிழப்பாகும்."

மேற்கண்டவாறு சண்டே ரைம்ஸ் இராணுவ ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பிரசுரமான அவரது கட்டுரையில் இடம் பெற்ற மற்றும் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணியளவில் கிளிநொச்சி, பரந்தன் பாதுகாப்பு அரண்கள் மீது விடுதலைப் புலிகள் மழை போல் மோட்டார் குண்டுகளைப் பொழிந்த வண்ணம் தாக்குதலை ஆரம்பித்தனர்.

புலிகளின் மோட்டார் குண்டுகள் சரியான இலக்குகளில் விழுந்து கொண்டிருந்தன.

புலிகளின் ஆண் போராளிகளும், பெண் போராளிகளும் அலை அலையாக வந்து தாக்குதலைத்தொடுத்தனர்.

பாதுகாப்பு அரண்கள் மீது சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்த வண்ணம் அவர்கள் வந்துகொண்டிருந்தனர்.

அந்தச் சமயம் 54 ஆவது படைப் பிரிவின் பிரதம அதிகாரி மற்றும் 543 ஆவது பிரிகேட் கொமாண்டர் ஆகியோர் கிளிநொச்சியிலேயே தங்கியிருந்தனர். புலிகளுக்கு எதிரான தாக்குதலில் அவர்களும் ஈடுபட்டனர்.

கிளிநொச்சியைச் சுற்றியுள்ள பாதுகாப்பு முன்னரங்குகளில் ஏழு நிலையங்களில் புலிகள் ஒரே சமயத்தில் தாக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சரவைக் கூட்டத்தில் படையினர் இழப்புகுறித்து சரியான தகவல் இல்லை!

கொழும்பு, ஒக். 5

கடந்த புதன்கிழமை அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றபோது பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தார்.

கிளிநொச்சியில் பெரும் தாக்குதல் இடம்பெற்றுப் படையினர் பின்வாங்கி இருந்ததால் படையினருக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து அறிவதற்கு அமைச்சர்கள் பலரும் விரும்பினர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் பக்கமே அமைச்சர்களின் கவனம் திரும்பியிருந்தது.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா படையினருக்கு ஏற்பட்ட இழப்புக் குறித்து கேள்வி எழுப்பியபோது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சோதனை தீவிரம்

வவுனியா, ஒக். 5

வவுனியா நகரில் நேற்று சோதனைகள் தீவிரமாக்கப்பட்டிருந்தன.

நேற்று முன்தினம் தாண்டிக்குளத்தில் இடம்பெற்ற கண்ணி வெடித்தாக்குதலையடுத்து நேற்றுக் காலை முதல் படையினர் தீவிர

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு மக்களின் போக்குவரத்து பிரச்சினை: கொழும்பில் கூட்டம்

கொழும்பு, ஒக். 5

கொழும்புக்கும், பலாலிக்கும் இடையிலான விமானப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதால் குடாநாட்டு மக்களின் போக்குவரத்துத் தொடர்பாக விசேட கூட்டம் ஒன்று நாளை கொழும்பு பாதுகாப்பு அமைச்சில் நடைபெறவிருக்கிறது.

விமானப்போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதையடுத்து, கப்பல் சேவை மூலம் போக்குவரத்தைத் சீராக்க எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்த டி சில்வா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் முப்படை அதிகாரிகளும் அத்தியாவசிய சேவைகள் திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்றுவர். (இ-3)

## கிளிநொச்சியில் இழந்த பகுதிகளை மீட்கும் திறன் படையினருக்கு உண்டு

### ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 5

"கிளிநொச்சியில் இழக்கப்பட்ட பிரதேசத்தை மிக விரைவில் வென்றெடுக்க படையினருக்கு ஆத்ம விசுவாசமும், துணிச்சலும், அதீத ஆர்வமும் உள்ளன"

மேற்கண்டவாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

மாங்குளம் வெற்றி குறித்தும்—

கிளிநொச்சித் தாக்குதல் குறித்தும்— அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது—

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரின் வீரமிக்க போராட்டத்தால் புலிகளின் கடைசிக் கோட்டையான மாங்குளத்தைக் கைப்பற்றிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு விமானிகள் சேவையாற்ற பின்னடிப்பு!

கொழும்பு, ஒக். 5

இரணைதீவுக் கடற்பகுதியில் வீழ்ந்த "லயன் ஏயர்" விமானம் தொடர்பான விவரம் வெளியாகும் வரை விமான சேவையை நடத்த வெளிநாட்டு விமானிகள் மறுத்துள்ளனர் எனக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடலில் வீழ்ந்த விமானம் தொடர்பாக ஆராய்ந்து உண்மை நிலைமை கண்டறியப்பட்ட பின்பே விமானத்தை ஓட்ட முடியும் என விமானிகள் தெரிவித்துள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சில புனரமைப்புத் திட்டங்களுக்கு
# 4 கோடி 22 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஒக் .5
வடபகுதி மீள்குடியேற்ற புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையினால் யாழ். மாவட்ட புனர் நிர்மாண புனரமைப்பு இணைப்புக் குழு ஊடாகசிலஅபிவிருத்தித் திட்டங்கள் மேற் கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்தத் திட்டங்களுக்கு 4 கோடியே 22 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் இதில் இரண்டு கோடி ரூபா முற் பணமாக வழங்கப்பட்டுள்ள தாகத்தெரிவிக்கப்படுகிறது.

தற்போது மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களும அதற்கான நிதி ஒதுக்கீட்டு விவரங்களும் வருமாறு:

யாழ். நாகவிகாரை மீள் நிர்மாணம்—40 லட்சம்ரூபா, கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய புனரமைப்பு— 2 கோடியே 4 லட்சத்து 71 ஆயிரம் ரூபா, மாவிட்டபுரம் கந்தசாமி கோயில்— 95 லட்சத்து 90 ஆயிரம் ரூபா, கி.டி தர வீதி திருத்தம்— 2கோடி ரூபா, கோண்டாவில் பஸ் டிப்போ திருத்தம்— 52 லட்சத்து 75 ஆயிரம் ரூபா, காரைநகர் டிப்போ— 20 லட்சம் ரூபா, காரைநகர் சிவன் கோயில் — 50 லட்சத்து 65 ஆயிரம் ரூபா, சீநோர் தொழிற்சாலை — 22 லட்சத்து 48 ஆயிரம் ரூபா, பருத்தித்துறை இறங்குதுறை புனரமைப்பு— 56 லட்சம் ரூபா.

(ஐ 5-6)


## சங்கானை சிவன் ஆலய
## புனரமைப்புத் திருப்பணி

சங்கானை தெற்கு ஓடக்கரை வீதியில் எழுந்தருளி இருக்கும் விசாலாட்சி சமேத விஸ்வநாத சிவன் ஆலய திருத்த வேலைகளை அழகுற முடித்து ஐப்பசி மாதம் கும்பாபிஷேகம் செய்ய அருள் கூடியிருப்பதால் சிவன் அடியார்கள் ஒவ்வொருவரும் கூடிய பண உதவிகளையும் பொருள், சரீர உதவிகளையும் செய்யுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

மேற்படி உதவிகளைச் செய்வோர் ஆலய நிர்வாகத்தர் நா. இராமநாதன், தேவாலய வீதி, சங்கானை என்பவரிடம் ஒப்படைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

நா. இராமநாதன்
நிர்வாகத்தர்

(59654)


## விசேட பாஸ்

வடமராட்சி கிழக்கு நாகர் கோயிலின் மஹோற்சவத்தை முன்னிட்டு கோயிலுக்குச் செல்பவர்களுக்குப் படையினரால் விசேட 'பாஸ்' வழங்கப்பட்டு வருகின்றது. (இ-36)

## இன்று கருத்துரை

யாழ். அகவொளி நிலையத்தினால் மாதாமாதம் போயா தினத்தில் நடத்தப் பட்டுவரும் கருத்தரங்குத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் 'குடும்பத்தில் சமூகத்தின் செல்வாக்கு' என்னும் தலைப்பில் அருட்திரு சீ. ஜே. ஜெயக்குமார் அடிகளார் கருத்துரை வழங்குவார். (இ-51)

## மின்னல் தாக்கி பெண் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 5
தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் இடிமின்னல் தாக்கி உயிரிழந்தார்.

கரவெட்டி மேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இராசகிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணன் மகேஸ்வரி (வயது 57) என்பவரே மரணமானவராவார்.

சடலம் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டு அங்கு நடைபெற்ற மரண விசாரணையை தொடர்ந்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ-109-15-139)

## முதியோருக்கு உடு புடைவைகள்

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் கைதடி முதியோர் இல்லத்தில் உள்ள முதியோருக்கு உடு புடைவைகள் வழங்கும் வைபவம் இன்று கழகத் தலைவர் லயன் டாக்டர் பி. வி. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

முதியோர்களுக்கு வழங்க வென கழகத்தினால் வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலுமிருந்தும் உடு புடைவைகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக கழகச் செயலாளர் லயன் அ. பொ. செல்லையா தெரிவித்தார். (இ-117)


## நல்லூர் லயன்ஸ் கழகம்

### விசேட அறிவித்தல்

இன்று 05-10-1998 இல் எமது கழகத்தால் நடத்தப்படவிருந்த அதிர்ஷ்ட லாபச்சீட்டிழுப்பு எதிர் வரும் 27-12-1998 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

லயன். பா. தவபாலன்
நல்லூர் லயன்ஸ் கழகம்,
நல்லூர்.

(சி/5086)


## கண்ணீர் அஞ்சலி

குடத்தனை வடக்கைச் சேர்ந்த

### மயில்வாகனம் மல்லிகாதேவி
### மயில்வாகனம் சபேசன்

ஆகியோர் அகால மரணமடைந்ததையிட்டு அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதபாங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குறிப்பு: விசேட ஆராதனை தென்னிந்திய திருச்சபையில் 05. 09. 98 இன்று மாலை 3 மணிக்கு நடைபெறும்.

தென்னிந்தியதிருச்சபை.
குடத்தனை.

(C/5085)

## மரண அறிவித்தல்கள்

### விஜயரெட்ணம் பரமேஸ்வரி
(வேலணை 5ஆம் வட்டாரம்)

வேலணை 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட விஜயரெட்ணம் பரமேஸ்வரி நேற்று (04-10-1998) கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான காரா்ளசிங்கம் - தில்லைவனம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற மருதையினார் (நெடுந்தீவு) - சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகளும், ம. விஜயரெட்ணம் (கல்விக்கோட்டம், வேலணை) அவர்களின் அன்பு மனைவியும், கார்த்திகா (யாழ். இந்துமகளிர் கல்லூரி), கலைப்பிரியா (யாழ். இந்துமகளிர் கல்லூரி). சாரங்கன் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் பாசம்மிகுந்த தாயாரும், அமிர்தவல்லி (கனடா), பொன்னம்பலம் (ஓய்வுபெற்ற தபாலதிபர்), புவனேஸ்வரி, மரகதவல்லி, இராசேஸ்வரி (கனடா), கணேசலிங்கம் (கிராமசேவையாளர், வேலணை கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராசரெத்தினம் (புளியங்கூடல்), சாந்திசறோஜினி (தொலைத்தொடர்பு திணைக்களம், வவுனியா), தேவராசா (வர்த்தகர், மாவத்தகம), மார்க்கண்டு (கனடா), ஆனந்தி (ஆசிரியை, இந்து த. க. பாடசாலை, நல்லூர்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ம. விஜயரெட்ணம்
(கல்விக்கோட்டம்— வேலணை)
கா. கணேசலிங்கம்
(கிராம அலுவலர், வேலணை கிழக்கு)

16/21, சிவன்லேன்,
திருநெல்வேலி.
(நேர்ஸிங் ஹோம் அருகில்)

(59660)

### திருமதி
### மயில்வாகனம் றெஜீனா

திருமதி மயில்வாகனம் றெஜீனா காலமாகிவிட்டார்.

இவர் சூசைப்பிள்ளை—லூர்த்தம்மா அவர்களின் சிரேஷ்ட புத்திரியும், கந்தர் சேதுப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும், க. மயில்வாகனம் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர் யாழ்-மாநகரசபை) அவர்களின் அன்பு மனைவியும், செல்வன் டொனால்ட் சுதேஷ் (தொழில் நுட்ப உத்தியோகத்தர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை), செல்வன் பேனாட் ரமேஷ் (யாழ்-பல்கலைக்கழகம்), செல்வி மாலினி (ஆசிரியை, ஓ. எல். ஆர் பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயாரும், திருமதி புஸ்பராணி ரத்னஜோதி (ஜேர்மனி), அவர்களின் அன்புச்சகோதரியும், திருமதி பாக்கியம் (வவுனியா), காலஞ்சென்ற நல்லையா, திருமதி மகேஸ்வரி சற்குணம், செல்வி பரமேஸ்வரி, திருமதி கமலேஸ்வரி செல்வநாதன் (நோர்வே) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05-10-98) திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு (இல. 211, 2ஆம் குறுக்குத் தெரு - யாழ்ப்பாணம்) அவரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக சொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. மயில்வாகனம்
(கணவன்)

211, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(59656)


உ
ஸ்ரீ ராமஜெயம்

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் புரட்டாதி மாதம் 19 ஆம் திகதி இன்று (05-10-1998) திங்கட்கிழமை காலை 06 - 02 — 06 - 50 மணி வரையில் வரும் சுபவேளையில்

### றோயல் பேக் சென்ரர் அன் ரீ ரூம்
### Royal Bake Centre & Tea Room

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்களும் சமுகந்தந்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் இனிய நல்வரவை நாடும்
ஐயம்பெருமாள் சுரேஷ்

133, கஸ்தூரியார் வீதி,
கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம்.

(59658)



## BARATHY
சித்தன்கேணி.

SPOKEN ENGLISH WITH GRAMMAR
By: BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்:
இன்று 05 - 10 - 98
1-30 மணி.
அனுமதிகளைப் பெற்றுக் கொளளவும்

(59661)



## வணங்கி மகிழ்கின்றோம்

ஸ்ரீ நல்லை சிவன் தேவஸ்தானம், முன்னேஸ்வரம் ஸ்ரீ முன்னைநாத சுவாமி தேவஸ்தானம் ஆகியவற்றின் பிரதம குருவும் தர்மகர்த்தாவும், ஸ்ரீவித்யா குருகுலம், ஸ்ரீ முத்துவிநாயகர் வேதாகம ஆய்வு நிறுவனம் ஆகியவற்றின் ஸ்தாபகரும், சோ. பொன். இராமநாதன் வேதாகம ஆய்வு நிறுவனம் நியந்த்ரீ ஆகியவற்றின் காப்பாளரும் ஆகிய

பேராசிரியர்
### கார்த்திகேயக்குருக்கள்
### கைலாஸநாதக்குருக்கள்

அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவிக்கும் இந்நாளில் பேராசானை வணங்கியும், யாழ். பல்கலைக்கழகத்தை வாழ்த்தியும் மகிழ்கின்றோம்.

'நியந்த்ரீ'
சிவன் கோயில், நல்லூர்.

(59659)



## ரீகல் டாக்கீஸ்
ஏச்சமோட்டை.

விஜய் நடித்த
லவ்டுடே 11.00-5.30
[illegible]
[illegible] 2.30
(யாவும் புதிய நேரப்படி)

(59657)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## ஆலோசனை செய்க!

செம்மணி மனிதப் புதைகுழி பற்றிய தகவல்கள் வெளியாகி மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. எனினும் அந்தப் புதைகுழிகளைத் தோண்டி உண்மையை வெளிப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

மழைகாலம்வரை காலத்தைக் கடத்தி, அதைக் காட்டி புதைகுழிகளைத் தோண்டும் வாய்ப்பை அடுத்த வருடம் வரை இழுத்தடித்து ஆறப்போட்டு விட்டால், அடுத்த ஆண்டு முற்பகுதியில் உத்தேச தேர்தல்களை நடத்திய பின்னர் ஆறுதலாகப் புதைகுழி விடயத்தைப் பார்த்துக்கொள்ளலாம் என அரசு எண்ணுகிறது போலும்.

சூரியகந்தப் புதைகுழிகள் பற்றித் தகவல் வெளியான போது கொதித்து எழுந்து, சூடுபட்ட யானை போல குதித்து, அதை வைத்தே பொதுத் தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களில் வெற்றியீட்டியவர்கள்—

செம்மணிப் புதைகுழி விவகாரத்தால் அடுத்த தேர்தலில் மண்கவ்வ வேண்டி வந்து விடலாம் என அஞ்சுகின்றார்கள் போலும்—

அதுதான் இந்த இழுத்தடிப்புக்கு எல்லாம் காரணம் எனலாம்.

இந்த விவகாரத்தில் மனித நேய அமைப்புகளின் ஒன்றியம் ஆக்கிரோஷமாக போர்க்கொடி உயர்த்தியிருப்பது நியாயமே

என்றாலும் நாம் ஒரு விடயத்தை மறந்து விடக்கூடாது. சூரியகந்த மனிதப் புதைகுழியில் இருந்து வெளிவந்த எலும்புக் கூடுகள் அரசியல் வாதிகளின் வெற்றிக்கு மட்டுமே உதவின. அந்த எலும்புக் கூடுகள் உரிய முறையில் அடையாளம் காணப்படுவதற்கோ, குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுவதற்கோ சரியான நடவடிக்கை எடுக்கப்படாமல் அல்லது எடுக்கப்பட முடியாமல் போயிற்று.

அதே நிலைமை செம்மணிக்கும் வந்து விடக்கூடாது. எனவே அங்கே புதைக்கப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படுவோரில் கணிசமானோர் பற்றிய தகவல்களை சட்ட முறைப்படி சேகரித்துப் பதிந்து கொண்டு உயிரிழந்தோரின் உடைகள், நகைகள் மற்றும் எச்சங்களை அடையாளங்காணக் கூடிய உறவினர்களுடன் சென்றே புதைகுழி தோண்டப்பட வேண்டும். சட்ட ரீதியான ஆயத்தங்களை — சட்ட முறைப்படி — மனித உரிமைகள் ஆணைக்குழு மேற்கொள்ள உதவுவதும் ஒத்துழைப்பதும் எமது கடமை. இல்லையேல் செம்மணிப் புதைகுழிகளில் வெளிப்படும் எலும்புகளும் எச்சங்களும் சூரியகந்த போல அரசியல் வாதிகளுக்கு பயன்படமட்டுமே உதவும்; அச்சடலங்களுக்கு உரியோர் அடையாளங் காணப்படவோ குற்றமிழைத்தோர் சட்டத்தின் முன்னால் நிறுத்தித் தண்டிக்கப்படவோ வாய்ப்பில்லாமல் போய்விடலாம்.

இந்த விடயத்தில் மனித நேய அமைப்புகள் அரசியல் சாராதவர்களின் சட்ட ஆலோசனையைப் பெறுவது நல்லது.

### மனிதப் புதைகுழியை ஆராய்வதற்காக

# தென்பகுதி மருத்துவ நிபுணர் யாழ். வருவதற்கு பின்னடிப்பு

## 3 மாதங்களுக்கு சூழ்நிலை சரியில்லையாம்!

யாழ்ப்பாணம், ஒக். 5

''செம்மணிப் புதைகுழி தொடர்பாக அங்கு சென்று ஆராய்வதற்கு அங்கு சுமுகமான சூழ்நிலை இல்லை. மூன்று மாதங்களுக்கு அங்கு போகக்கூடிய நிலைவராது.''

று குணு பல்கலைக்கழக உடற்கூற்று நுண்ணியல் பேராசிரியர் சந்திரசிறி நிரியல்ல இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டி அங்கு பெறக்கூடிய மனித எச்சங்களை மருத்துவ ரீதியில் ஆராயும் நிபுணராக அவர் யாழ். வரவிருந்தார்.

ஆனால் தற்போது தமது யாழ். பயணத்தைமேற்கொள்ள முடியாது என்று அவர் கூறுகின்றார்.

''செம்மணி தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் உடற்கூற்று நுண்ணியல் நிபுணர்களை அழைக்க வேண்டும் என சிலர் கோரிக்கை விடுக்கின்றனர். அவர்களை இங்கு அழைக்க பெருந்தொகையான நிதி செலவாகும். அத்துடன் ஐக்கிய நாடுகள் ஒரு சில உடற்கூற்று நிபுணர்களை விட ஏனையோர் எங்களில் பத்தில் ஒரு பங்கு அனுபவம்கூடக்கொண்டவர்களல்லர்.

''சேவையில் என்னைவிட அனுபவம் குறைந்தவர்கள் இங்கு வந்தால் அவர்களுக்குக் கீழ் நான் கடமைபுரிய மாட்டேன்என மனிதஉரிமை ஆணைக்குழுவின் தலைவர் ஏ. எஸ். எம். செனவிரத்னவிற்கு அறிவித்துள்ளேன்''— என்றும் பேராசிரியர் சந்திரசிறி நிரியல்ல தெரிவித்தார்.

(உ-6)

## பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஒக். 5

சிம்பாப்வேயில் இருந்து 36 ஆயிரம் மோட்டார் ஷெல்களை ஏற்றிக்கொண்டு இலங்கைக்கு வரும் வழியிற் காணாமற்போன கப்பல் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த ஆர். மயில்வாகனன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக் கோட்டை நீதிவான் நீதிமன்ற மேலதிக நீதிபதி மேவின் காமினி விஜயதுங்க இவரை 25 ஆயிரம் ரூபா பிணையில் விடுவித்தார்.

நீதிமன்றப் பதிவாளரிடம் கடவுச் சீட்டை ஒப்படைக்கும் படியும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் 12 மணிக்கிடையில் 'இன்ரர்போல்' பொலீஸ் பிரிவுப் பொறுப்பாளரைச் சந்திக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(ஐ-6)

## ஆசிரியர் தின விழா

சுன்னாகம், ஒக். 5

ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர்தின விழா நாளை காலை 9 மணிக்கு அதிபர் மு. செல்வஸ்தான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் இளைப்பாறிய தபால் அதிபர் சிவசுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-27)

## காரைநகரில் வாந்திபேதி தடுப்புப் பிரசாரம் தீவிரம்

யாழ்ப்பாணம், ஒக். 5

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவைச் சேர்ந்த காரைநகரில் வாந்திபேதி நோயினால் சிறுவன் ஒருவன் இறந்ததை அடுத்து அப்பகுதியிலும், ஏனைய இடங்களிலும் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காரைநகர்ப் பகுதியிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் போடப்பட்டுள்ளதுடன், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றில் சுகாதார கருத்தரங்குகளும், போதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றது. இறந்த சிறுவனின் வீட்டுச் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு தடுப்பு மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. இத் தகவலை ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி கே. எஸ். வருணநாதன் தெரிவித்தார்.

இதேவேளை—

வாந்திபேதி பரவும் அபாயத்தினை முன்னிட்டு சுகாதார சீர்கேடுகளுடன் காணப்பட்ட ஊர்காவற்றுறையில் உள்ள மூன்று தேநீர்க் கடைகள் பிரதேச சபையின் அனுசரணையுடன் மூடப்பட்டன.

இதேவேளை—

'கொலரா அபாயம்' என்ற தலையங்கத்தில் பொதுமக்களுக்கான சுகாதார அறிவுறுத்தல்கள் அடங்கிய பெரிய அளவிலான துண்டுப் பிரசுரமும் ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஆகியோரினால் வெளியிடப்பட்டுள்ளன.

(ஐ-135)

### தீவுப் பகுதிகளில்

## காலாவதியான பொருள் கடைகளில் மீட்பு

கடந்த சில தினங்களாக ஊர்காவற்றுறை, காரைநகர், வேலணை ஆகிய இடங்களில் சுகாதாரப் பகுதியினர் கடைகளிலும், வியாபார நிலையங்களிலும் மேற் கொண்ட திடீர்ப் பரிசோதனைகளின் போது பெருந்தொகையான திகதி காலாவதியான பிஸ்கட், பப்படம், நெல்லிரசம் குளிர்பானம் என்பன கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற சுகாதார அதிகாரிகள் குழுவினர் இத் திடீர்ப் பரிசோதனைகளை நடத்தினர்.

அத்துடன் மதி உப்பு, சீதேவி உப்பு என்று லேபல் இடப்பட்டு அயடின் கலந்த உப்பு என்ற போலி குறிப்பு துண்டு ஒட்டப்பட்டு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உப்பு பைக்கற்றுகளும் கைப்பற்றப்பட்டன.

(ஐ-135)

### வலிகாமம் தெற்கில்

## சிறுவர், முதியோர் தின விழாக்கள்

வலிகாமம் தெற்கு, ஒக். 5

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் சர்வதேச சிறுவர் தினம், சர்வதேச முதியோர் தினம் ஆகியன எதிர்வரும் 7 ஆம், 8 ஆம் திகதிகளில் கொண்டாடப்பட உள்ளன.

உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இந்த விழாக்கள் நடைபெறும்.

மேற்படி இரு தினங்களையும் முன்னிட்டு இப்பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட உள்ளன.

சர்வதேச சிறுவர் தினத்தில் பல கலை நிகழ்ச்சிகளும், சிறப்புரைகளும் இடம்பெற உள்ளன.

முதியோர் தின விழாவில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட பல முதியவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கிக் கௌரவிக்கப்பட உள்ளனர்.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை பிரதேச செயலக திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் த. தேவராஜன் செய்துள்ளார்.

(ஐ-152)

**நாளை**

புரட்டாதி - 20

செவ்வாய்க்கிழமை

திதி: பிரதமை

முன்னிரவு: 11. 56 வரை.

நட்சத்திரம்: ரேவதி

முன்னிரவு 10. 09 வரை.

சுபநேரம்: 10.32 - 12.02

இராகுகாலம்: 3.02 - 4.32

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

**உதயவாக்கு**

அளவற்ற தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

சுவாமி விவேகானந்தர்

## தரவை நிலங்களிலும் நெற் செய்கைக்கு முயற்சி

வலி. தென்மேற்கு, ஒக். 5

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்குட்பட்ட பகுதிகளில் நெற்செய்கை பண்ணப்படாது தரவையாக இருக்கும் வயற்காணிகளை நெற் செய்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்க நவாலி விவசாய சம்மேளனம் முடிவு செய்துள்ளது.

நவாலி விவசாயிகள் சம்மேளனத்திற்குட்பட்ட பகுதிகளில் நெற்செய்கை பண்ணப்படாது இருக்கும் காணி விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

(ஐ-185)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 5

கோண்டாவில் மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் 9பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் யாழ். பாரதி வி. கழகத்தை எதிர்த்து, பாடும் மீன் வி. க. நீல அணி மோதவுள்ளது.

இன்று பிற்பகல் 4.30 மணிக்கு றோயல் வி. கழகத்தை எதிர்த்து சென். மேரிஸ் வி. க மோதும்.

(ஐ-9)

## திருமுறை விழா

சண்டிலிப்பாய், ஒக். 5

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் திருமுறை விழாவொன்றை இம்மாத இறுதியில் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

இச் சங்கத்தினால் அண்மையில் ஆனைக்கோட்டைப் பகுதிப் பாடசாலைகளின் மாணவரிடையே நடத்தப்பட்ட பண்ணிசைப் போட்டி, சமய அறிவுப் போட்டி, கோலம் போடும் போட்டி, மாலை கட்டும்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் இத் திருமுறை விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன.

(135)

## உடுப்பிட்டி கூ. சங்கம் ஊழியருக்கு ஊக்குவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றும் ஊழியர்களுக்கு அவர்களின் இரண்டு மாத சம்பளத்தொகை ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்பட உள்ளது.

சுமார் 110 ஊழியர்கள் ஊக்குவிப்புப் பணத்தைப் பெற உள்ளனர்.

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட இயக்குநர் சபை இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்கத் தீர்மானித்துள்ளது.

ஊக்குவிப்புப் பணத்தை ஊழியர்களுக்கு வழங்குவதற்கான அங்கீகாரத்தை பொதுச்சபை வழங்கியுள்ளது

இக் கொடுப்பனவு இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும் எனவும், அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் இயக்குநர்சபை தெரிவித்துள்ளது.

(ஐ-15)

## போசாக்கு நிகழ்ச்சிக் கருத்தரங்கு

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தால் நடத்தப்படும் பாடசாலைப் பிள்ளைகளுக்கான போசாக்கு நிகழ்ச்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் நான்கு தலைப்புக்களில் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன. கடந்த சனியன்று இக்கருத்தரங்கு நடைபெறவிருந்து பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் அ

## தீர்த்தோற்சவ சிறப்பு மலர்

 சமுத்திரத் தீர்த்தம் 05 - 10 - 98  கேணித் தீர்த்தம் 06 - 10 - 98 

வல்லிபுர ஆழ்வார்
அடி பணிந்து
ஏற்றம் பெறுவோம்

## அன்று அதிசய மீனாகத் திருவிளையாடல் புரிந்

# மாயக்கண்ணனுக்கு வங்கக்கடலில் இன்று தீர்த்த

ஈழத்தின் வட பகுதியை அலங்கரிக்கும் விஷ்ணு ஆலயங்களில் வரலாற்றுச் சிறப்பு மிக்க திருத்தலங்களில் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் முதன்மையானது. இந்தியாவில் உள்ள விஷ்ணு ஆலயங்கள் போல ஸ்ரீ வலலிபுர ஆலயத்திலும் புரட்டாதி மாதத்தில் மஹோற்சவம் நடைபெற்று வருகிறது.

ஈழத்தைப் பொறுத்தவரை வைணவம் தனி மதப்பிரிவாக வளராவிட்டாலும் விஷ்ணு வழிபாடு பேணப்பட்டு வருகிறது. விஷ்ணு ஆலயங்கள் பல்வேறு பெயர்களில் அமைந்திருக்கின்றன. சைவத்தையே பெரு நெறியாகக் கொண்ட ஈழத் தமிழர்கள் விஷ்ணுவை வழிபடும் பண்பையும் பேணிவருகிறார்கள்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்துள்ள வல்லிபுரம் பகுதியை யாழ்ப்பாண இராச்சியத்தின் பழைய இராசதானியாகிய சிங்கை நகர் என்று சுவாமி ஞானப்பிரகாசர், பேராசிரியர் கணபதிப் பிள்ளை போன்ற அறிஞர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் வல்லிபுரம் பகுதி தொல்பொருள் ஆராய்ச்சிக்கும் உட்படுத்தப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதியில் அமைந்துள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயமும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்டது என்று கூறப்படுகிறது. எந்த ஆலயத்திலும் இல்லாதவாறு கிருஷ்ண பரமாத்மாவின் ஆயுதமாகிய சக்கர ஆயுதம் மூலஸ்தானத்தில் (கர்ப்பக் கிருகத்தில்) பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபடப்பட்டு வருவது இங்குள்ள சிறப்பு அம்சமாகும்.

சக்கரம் மூலஸ்தானத்தில் வைத்துப் பூசிக்கப்படுவதற்கும், இவ்வாலயம் இப்பகுதியில் தோன்றியதற்கும் பல கர்ண பரம்பரைக் கதைகள் உள்ளன.

ஆனால் இன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும உண்மை யாதெனில் வல்லிபுர ஆழ்வார் ஆலயம் அமைந்த பகுதியில் இருந்து சுமார் 3 மைல் தொலைவில் உள்ள வங்கக் கடலில் இன்று சமுத்திர தீர்த்தம் நடைபெறும் பகுதியில் அதிசயமீன் ஒன்று புரட்டாதி பூரணை தினத்தன்று துள்ளிக்குதித்து ஆரவாரம் செய்தது. மக்கள் செய்வதறியாது ஏங்கித் தவித்தனர். வலைகளைக் கிழித்துக் கொண்டு மிகஉயரத்தில் பாய்ந்து குதித்து கட்டுமரங்களை உதைத்து வேடிக்கையாக விளையாடிக்



கொண்டிருந்தது. இரண்டு மூன்று தினங்களாக இடம் பெற்ற இச்சம்பவத்தைக் கேள்விப்பட்டு மக்கள் கூட்டம் கடற்கரையில் திரண்டது.

வராத்துப்பளையைச் சேர்ந்த லவல்வி என்றபெண் நாக சாபம் காரணமாகப் பிள்ளை இல்லாது இருந்ததனால் பலரும் அவரைக் கேலியும் கிண்டலும் செய்து மலடி என்ற பழிச் சொல்லையும் சொன்னார்கள். இதனால் மனம் நொந்திருந்த அம்மையார் பழிச்சொல் தீர தனக்கு ஒரு குழந்தை வேண்டுமென நெடுங்காலம் தவமிருந்தார்.

வங்கக் கடலிலே அதிசய மீன் செய்யும் திருவிளையடாலை அறியாதிருந்த அம்மையாரின் கனவிலே பகவான் தோன்றி நடைபெற்ற திருவிளையாடல்களைக் கூறிக் கடற்கரைக்கு மறுநாள் வரும்படி பணித்து மறைந்தார். கண் விழித்து எழுந்த லவல்வி இறைவனை நினைந்தவாறு குறிப்பிட்ட கடற்கரைக்கு வந்தாள். கடற்கரையில் உட்கார்ந்து பகவானை நினைத்து கோபாலா, கோவிந்தா, கண்ணா, கார்முகில்வண்ணா, ஹரி ஓம் நாராயணா என்று கூறியவாறு தியானித்துக் கொண்டிருந்தார். என்னே அதிசயம்? மூன்றுநாள்களாக மக்களைத் திகிலடையச் செய்து கொண்டிருந்த அந்த மீன் அம்மையாரின் மடியில் குதித்ததும் அழகான குழந்தையாக மாறியது. குழந்தையைக்கண்டதும் அங்கு திரண்டிருந்த மக்கள் ஆடினர்; பாடினர்; ஆரவாரம் செய்தனர்; அக மகிழ்ந்தனர். அம்மையார் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். பல்லக்கு ஒன்றில் குழந்தையை வைத்து அவ்வூர், அயலூர் மக்கள் ஒன்று சேர்ந்து தூக்கி வந்தனர். அன்று பல்லக்கில் குழந்தையைத் தூக்கி வந்த கற்கோவளம் மக்கள் ஆலய உற்சவ காலங்களில் இன்றும் முன்னின்று சுவாமி தூக்குகின்றனர்.

### கர்ணன்


நெடுந்தூரம் பல்லக்கைத் தூக்கிவந்ததாலும், பல்லக்கு வர வர பாரம் கூடியமையாலும் களைப்புற்ற மக்கள் மர நிழலில் பல்லக்கை இறக்கி வைத்துவிட்டு தாக சாந்தி செய்து மீண்டும் பல்லக்கைத் தூக்க முயன்றனர். மாயக் கண்ணன் அவ்விடமே தனக்கு ஆலயம் அமைக்க உகந்த இடம் என எண்ணிதிருவுளங் கொண்டானோ தெரியவில்லை. நீண்ட தூரம் தூக்கி வந்த பல்லக்கை வைத்த இடத்திலிருந்து அசைக்கவே முடியவில்லை. அனைவரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். அப்போது பல்லக்கிலிருந்த குழந்தை மறைந்தது. அவ்விடத்தில் அந்தணர் ஒருவர் தோன்றி அங்குள்ள பக்தர் ஒருவரிடத்தில் சக்கரம் ஒன்றைக் கொடுத்து அதையே வைத்துப் பூசிக்குமாறு அவரும் மறைந்தருளின

அந்த அந்தண கொடுக்கப்பட்ட சக்க இன்று மூலஸ்தான வைத்துப் பூசிக்கப்படுவ வும், பல்லக்கு இறக்கி கப்பட்ட இடமே ஆலயம் அமைந்துள்ள மாகவும் விளங்குவ கூறப்படுகிறது.

அவ்வாறே சக்கர மூலக் கருவறையில் வழிபடும் தலம் ஸ்ரீ வ ஆழ்வார் ஆ பமாகு சக்கரமான ஆக்ஞா ச காத்தலையும், சங்கு ப தலையும், தாமரை அருளலையும், அனந் வார் மறைத்தலையும் கின்றது.

இவ்வாறு வரலாற் சிறப்புக் கொண்ட இவ் யம் அலைகடலோரத் அழகிய வெண்மணற் பில் ஆல், அரசு, கொன் இலுப்பை, நாவல், போன்ற விருட்சங்க மத்தியில் ஏழுதளத்து கூடிய அழகிய இராஜ ரத்துடன் காட்சியளிக்கி இவ்வருடம் அழகிய தரிப்பிடம் ஒன்றும் உரு கப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின்வருட



மஹோற்சவம் கடந்த 20 ஆம் திகதி கொடியே துடன் ஆரம்பமா தொடர்ந்து நடை வந்த இம்மஹோற்சவ ரதோற்சவம் நேற்று ஞ றுக்கிழமையும், சமு தீர்த்தோற்சவம் இன் கட்கிழமையும் நடை கிறது. நாளை செவ் கிழமை கேணித்தீர்த்த வம்நடைபெற்று,இரவு இறக்கத்துடன் வருட மஹோற்சவம் நிறை வல்விபுர மாயவன் மீன் விலே தோன்றி திரு யாடல் செய்த கடலில் புரட்டாதி பூர தினத்தில் நடைபெறும் திர தீர்த்தோற்சவமும்

( 6 ஆம் பக்கம் பார்

மலர் உருவாக்கம்
உதயன்
**வடமராட்சி, பருத்தித்துறை செய்தியாளர்கள்**


**அம்சன் ஒளியகம்**
பெயின்ற், மின் உபகரண விற்பனையாளர்
பிரதான வீதி, நெல்லியடி.

**சிவசக்தி இரும்பகம்**
கட்டடப் பொருள்கள் விற்பனையாளர்
பஸ் நிலையம், நெல்லியடி.

**ராஜன் எலெக்ரிக்கல்ஸ்**
பிரதான வீதி, பருத்தித்துறை

**பாலன் விற்பனை நிலையம்**
பெயின்ற் விற்பனையாளர்
சிவன் வடக்கு வீதி, பருத்தித்துறை.

**கங்கை**
**சர்வதேச தொலைத் தொடர்பு**
தொலைபேசி இல: 07 0212289
வெளிநாட்டிலிருந்து: 0094-70-212289
கிராமக்கோட்டுச் சந்தி, புலோலி.

**மைலன் பேக்கரி**
வியாபாரிமூலை, பருத்தித்துறை.

**அரவிந்த் ஸ்ரூடியோ**
ஓராங்கட்டைச் சந்தி, பிரதான வீதி,
பருத்தித்துறை.

**மொடேர்ண் ஸ்ரோர்ஸ்**
உதயன் பிரதான முகவர், தேசிய தின, வாரப்பத்திரிகை, பாடசாலை உபகரணங்கள், காகிதாதிகள் விற்பனையாளர்.
பஸ் நிலையம், நெல்லியடி.

**ஜெய கணேசா ஸ்ரோர்ஸ்**
மொத்த, சில்லறை விற்பனையாளர்
வீரவாகு கட்டடம், பருத்தித்துறை.

**துர்க்கா சந்தைப்படுத்தும் சேவை**
பீடைநாசனி, உரம், கால்நடைத்தீவன விற்பனையாளர்.
சாவகச்சேரி வீதி, மந்திகை.

**துர்க்கா மணப்பந்தல் சேவை**
கண்ணகி அம்மன் கோயிலடி, மந்திகை, புலோலி

**ஸ்ரீ முருகன் மெடிக்கல் ஸ்ரோர்ஸ்**
பருத்தித்துறை- யாழ்ப்பாணம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

**சதா பொன்ஸ்**
உதயன் முகவர்
மாலை, சந்தி, அல்வாய் கிழக்கு,
அல்வாய்.

**வினோதினி நகைமாடம்**
தரமான 22 கரட் நகைகளுக்கும், விருப்பமான டிசைன்களுக்கும் இன்றே நாடுங்கள்.
மத்திய மகாவித்தியாலய வீதி,
நெல்லியடி.

**புதிய சீமாட்டி புடைவை அகம்**
பிரதான வீதி, நெல்லியடி.
**சகுந்தலா புடைவை அகம்**
பிரதான வீதி, நெல்லியடி.

**சுபாஸ் பேக்கரி**
பிரதான வீதி, நெல்லியடி.
**லவ்லி கூல்பார்**
பிரதான வீதி, நெல்லியடி

**ஜனனி நகைமாடம்**
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்.
தங்கப்பவுண் வியாபாரம் செய்வோர்
பருத்தித்துறை- யாழ்ப்பாணம் பிரதான வீதி
பருத்தித்துறை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ர் ஆலய



கீதை சொன்ன
கண்ணன் பாதமலர்
தொழுவோம்



புரிந்த

ர்த்தம்

...க்குமாறு கூறி ...ந்தருளினார். ...ந்தணைரால் ...ட சக்கரமே ...லஸ்தானத்தில் ...க்கப்படுவதாக ... இறக்கி வைக் ...டமே இன்று ...மந்துள்ள இட ...விளங்குவதாகக் ...

சக்கரத்தை ...றயில் வைத்து ...ம் ஸ்ரீ வல்லிபுர ...பமாகு... ர்ம ...ஆக்ஞா சக்கரம் ... சங்கு படைத் ... தாமரை மலர் ... அனந்தாழ் ...லையும் குறிக் ...

...வரலாற்றுச் ...ண்ட இவ்வால ...லோரத்தில் ...மணற் பரப் ...சு, கொன்றை, ...வல், சவுக்கு ...ட்சங்களின் ...முதளத்துடன் ... இராஜகோபு ...சியளிக்கிறது. ... அழகிய தேர் ...றும் உருவாக் ...

...தின்வருடாந்த



... கடந்த மாதம் ...கொடியேற்றத் ...ம்பமானது. ... நடைபெற்று ...ஹோற்சவத்தின் ...நேற்று ஞாயிற் ... சமுத்திர ...ம் இன்று திங் ... நடைபெறு ...ள செவ்வாய்க் ...த்தீர்த்த உற்ச ...று, இரவுகொடி ... வருடாந்த ... நிறைவுறும். ...வன் மீன் உரு ...றி திருவிளை ...செய்த வங்கக் ...டாதி பூரணை ...டபெறும்சமுத் ...ற்சவமும் வர ...கம் பார்க்க)


...அகம்
...லியடி.
...கம்
...லியடி.

...டம்
...ளுக்கு
...வார்
...ன வீதி.

அம்பிகை நகைமாடம்
பருத்தித்துறை - யாழ்ப்பாணம்
பிரதான வீதி, பருத்தித்துறை

ஈஸ்வரி நகையகம்
தங்கப்பவுண் வியாபாரம்
பிரதான வீதி, பருத்தித்துறை.

ராணி பேக்கரி
ஓராங்கட்டைச் சந்தி, பிரதானவீதி,
பருத்தித்துறை.

குகன் ஸ்ருடியோ
இரண்டாம்குறுக்குத்தெரு,
பருத்தித்துறை.

கலைச்சோலை
உதயன் பிரதான முகவர், தேசிய தின
வாரப்பத்திரிகை விற்பனையாளர்
தபாற்கந்தோர் வீதி, வல்வெட்டித்துறை

வே. மனோகரன்
மிதிவண்டி, உதிரிப்பாக விற்பனையாளர்
மந்திகை, புலோலி.

கஜமுகன்
பல்பொருள் வாணிபம்
ஆஸ்பத்திரிமுன்பாக, மந்திகை.

நாவலர் புத்தகசாலை
பாடசாலை உபகரணங்கள், காகிதாதி
கள், உதயன் தேசியபத்திரிகை
விற்பனையாளர்
மந்திகை, புலோலி.

பரந்தாமன்ஸ்
சைக்கிள் வண்டி, உதிரிப்பாக
விற்பனையாளர்
பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி,
மந்திகை

மந்திகை மருந்தகம்
பருத்தித்துறை - யாழ்ப்பாணம்வீதி
புலோலி தெற்கு புலோலி

சென்றல் ரயர் வேக்ஸ்
பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதி.
மந்திகை, புலோலி.

லிபேட்டி மோட்டோர்ஸ் ஹவுஸ்
சகல விதமான வாகன உதிரிப்பாக
விற்பனையாளர்
பஸ்நிலையம், நெல்லியடி


# கிளிநொச்சி நகரம் பாழடைந்து காட்சியளிப்பதாக மக்கள் தெரிவிப்பு

## வீடு பார்க்கச் சென்ற இருவர் கால் இழப்பு

கொழும்பு, ஒக். 5

விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட கிளிநொச்சி நகரப் பகுதியில் உள்ள தங்கள் வீடுகள் கட்டடங்களை பொதுமக்கள் சென்று பார்வையிட்டு வருவதாக வவுனியாவுக்குக்கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி அரச செயலகக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும், அது தவிர அங்குள்ள வீடுகள், ஆலயங்கள், பொதுக் கட்டடங்கள் அனைத்தும் சேதமடைந்து காணப்படுவதாகவும் அங்கு சென்று திரும்பிய பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். நகரிலும், நகரை அண்டிய பகுதிகளிலும் பற்றைகள் வளர்ந்து பாழடைந்து காணப்படுகின்றன. சில இடங்களில் பிண வாடை வீசுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையை அண்டிய பகுதியில் மோதல் இடம் பெறுவதற்கு அறிகுறியாக வேட்டுச் சத்தங்கள் இடையிடையே கேட்டபடி இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை—

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற இருவர் மிதிவெடிகளில் சிக்கி கால் இழந்துள்ளனர்.

ஜெயந்தி நகரில் உள்ள வீட்டைப் பார்க்க தனது தந்தையுடன் சென்ற செல்வநாயகம் நிக்ஷன் (வயது 15) என்பவர் கடந்த புதனன்று மிதிவெடியில் சிக்கினார். ஏழாம் வாய்க்காலில் உள்ள தனது வீட்டைப் பார்க்கச் சென்ற நடராசா சுரேஸ்வரன் (வயது 25) என்ற இளைஞரும் மிதிவெடியில் சிக்கி கால் இழந்தார். (ஐ-10)

## முன்சேவைப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஒக். 5

யாழ்ப்பாணம் கல்வி வலயம்- 1 பாடசாலைகளில் அண்மையில் நியமனம் பெற்ற பட்டதாரி, சங்கீத டிப்ளோமா பயிலுநர் ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சி நாளை மறுதினம் புதன்கிழமை முதல் யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பயிற்சிக்கு சமுகமளிக்கும் பயிலுநர் ஆசிரியர்கள் அதிபர்களிடமிருந்து கடமையேற்ற திகதி, நியமனவகை ஆகியவற்றை உள்ளடக்கிய கடிதமொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். முதல் நியமனம் பெறும் இவ்வாசிரியர்கள் தவறாமல் இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-8)

## லொறி- அம்புலன்ஸ்மோதி இரு படையினர் பலி!

### தெஹிவளையில் சம்பவம்

கொழும்பு, ஒக். 5

தெஹிவளையில் நேற்று முன்தினம் அதிகாலை இராணுவ அம்புலன்ஸ் ஒன்று லொறியுடன் நேருக்கு நேர் மோதுண்டதில் அம்புலன்ஸில் இருந்த இரு இராணுவத்தினர் பலியாகினர்.

காலி வீதியில் இரத்மலானை விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த அம்புலன்ஸும் கொழும்பு நோக்கிச் சென்ற லொறியுமே விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் அம்புலன்ஸில் சென்று கொண்டிருந்த சார்ஜன்ட் மேஜர் கருணாசேனா சாரதியான லான்ஸ் கோப்ரல் விக்கிரமசிங்க ஆகியோரே படுகாயமடைந்து களுபோவில ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதுவழியில் மரணமானார்கள்.

பலியானவர்களில் ஒருவரான கருணாசேன பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு அவசரமாக இடமாற்றம் செய்யப்பட்டதனால் அங்கு செல்வதற்காக இரத்மலானை விமான நிலையம் நோக்கிச் சென்று கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவர் முதல்நாளும் பலாலி செல்வதற்காக இரத்மலானை விமான நிலையம் சென்று விமானம் கிடைக்காமையால் திரும்பியிருந்தார் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது லொறியின் சாரதியும், நடத்துநரும் விசாரணையின் பொருட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ-6)

## மாணவருக்கு பூச்சி மருந்து

சண்டிலிப்பாய், ஒக். 5

மானிப்பாய் வட்டலயன்ஸ் கழகம் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து நாளை மறுதினம் புதன்கிழமையன்று சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலயத்திலுள்ள மாணவர்களுக்கு பூச்சி மருந்து வழங்கவுள்ளது. (ஐ-135)

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 5

மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையின் பழைய மாணவர் சங்கம் ஒழுங்கு செய்துள்ள உலக ஆசிரியர் தினவிழா நாளைசெவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி பாடசாலை மண்டபத்தில் க. பாலச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு பொறியியலாளர் ஆ. சந்தானகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினராக நாதஸ்வர வித்துவான் வீ. கே. கானமூர்த்தியும் கலந்துகொள்வர். பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ஐ-8)

## கிளிநொச்சித் தாக்குதல்; விசாரணை நடத்தக்குழு

### இராணுவத் தளபதி நியமிப்பு

கொழும்பு, ஒக். 5

கிளிநொச்சி மற்றும் பரந்தன் பகுதிகளில் விடுதலைப் புலிகள் நடத்திய பாரிய தாக்குதல் குறித்து விசாரணை நடத்த இராணுவ அதிகாரிகள் குழு ஒன்றை இராணுவத்தளபதி நியமிக்கவுள்ளார்.

இந்தப் பாரிய மோதலில் நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டதுடன் கிளிநொச்சிப் பிரதேசம் புலிகளால் கைப்பற்றப்பட்டதை அடுத்தே இந்த விசாரணைக் குழு நியமிக்கப்படவுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் கிளிநொச்சி மற்றும் பரந்தன் பகுதிகளில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல் குறித்து விசாரணை நடத்தவும் இராணுவ விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. அதன் அறிக்கை இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## நவாலிப் பகுதிக்கு மின் கிடைக்கவில்லை

வலி. தென்மேற்கு, ஒக். 5

வலி. தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நவாலிப் பகுதிக்கு இது வரை மின்சாரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விரைவில் நவாலிப் பகுதி மக்கள் மின் வசதியைப் பெறக்கூடியவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு நவாலி வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தை மக்கள் கோரியுள்ளனர்.

அருகிலுள்ள மானிப்பாய் பகுதிக்கு மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. (ஐ-185)

## மாநாட்டு மண்டபம் அமைப்பு

சண்டிலிப்பாய், ஒக். 5

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பணிமனையில் மாநாட்டு மண்டபம் ஒன்று சுமார் ஐந்து இலட்ச ரூபா செலவில் நிறுவப்படவுள்ளது. இக்கட்டடம் தற்போதுள்ள பணிமனையின் வடக்குப் பக்கத்தில் நிறுவப்படவுள்ளது. அண்மையில் இதற்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்ற போது பிரதேச செயலர் நா. வேதநாயகன் அடிக்கல்லை சம்பிரதாய முறைப்படி நடுகை செய்தார்.

## சிப்பி சேகரிக்க படையினர் ‘பாஸ்’

காக்கைதீவுப்பகுதியில்சிப்பி சேகரிப்பதற்கு பாதுகாப்புப் படையினரால் கடந்த முதலாம் திகதி தொடக்கம் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

14 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு அவர்கள் பாடசாலைக்குச் செல்லுவது பாதிக்கும் என்பதால் சிப்பி பொறுக்குவதற்கு அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனைக்கோட்டை கூளாவடியிலுள்ள இராணுவத்தினரே இதற்கான அனுமதிப் பத்திரத்தை வழங்கினர். (ஐ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு கேரான வத்தை ஒழுங்கை எனும் இடத்தில் பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து இருநூறு யார் தூரத்தில் 3½ பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. கூடிய விலை மதிப்போர் எவருக்கும் கொடுக்கப்படும். தொடர்பு: V. சிவசுப்பிரமணியம், தொட்டிலடி, சங்கானை. (59627)

30'X40' நீளமுள்ள இரண்டு ரியூசன்வகுப்புக்கள் அமைந்த பனை மரத்தூண்களுடன் கூடிய மரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு; மூ. தம்பையா (ஆசிரியர்), மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி. (சி/5069)

புதியபோட்டோஸ்ரட் இயந்திரம் [நியூமொடல் Sf 1118 - Japan] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கெங்கேஸ்வரன், மான்ஸ் பாடசாலை வீதி, டச்சுறோட் உடுவில் என்ற முகவரியில் தொடர்பு கொள்க. (59648)

மோட்டார் சைக்கிள் (லான்சர் 50), சோக்கேஸ், கட்டில், அலுமாரி, டெக், T.V கேம் மற்றும் சில பொருள்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. ஜனார்த்தனன், கமலம் கடையடி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (59598)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணமா? கொழும்பா? எங்களது இன்றைய வாழ்க்கையைச் சித்திரிக்கும் 7 நாடகங்களும் 4 கட்டுரைகளும் 300 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. படிக்கவும், நடிக்கவும், பரிசளிக்கவும் ஏற்றவை. 50/=. (59622)

### தேவை

எமது மருந்துப் பொருள்களுடன் பரிச்சயமுள்ள விற்பனை அனுபவமுள்ள மருந்து விற்பனைப் பிரதிநிதி தேவை. 09-10-98 வெள்ளியன்று நேரில் தொடர்பு கொள்ளவும். குறிஞ்சி மருந்தகம், 558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/5082)

குறைந்தது 2 வருட அனுபவமும் HNDA அல்லது அதற்கு சமமான தகைமையுடைய கணக்கு லிகிதர் தேவை. 09-10-98 வெள்ளியன்று நேரில் தொடர்பு கொள்ளவும். குறிஞ்சி மருந்தகம், 558, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி/5081)

நகர மாநகரசபை எல்லைக்கண்மையில் எல்லைக்குள் வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: இல. 796, C/o, உதயன், யாழ்ப்பாணம். (59644)

### திருத்துதல

சகலவிதமான தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் மிகச்சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறித்த நேரத்தில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு:- "ஜெசிவா" தட்டச்சு இயந்திர திருத்த சேவை, 140, பலாலி வீதி, திருநெல்வேலி (பரமேஸ்வரா சந்தி) காலை 7.30- மாலை 5.30. (59597)

### இறைச்சிக் கோழி

புறொயிலா இறைச்சிக் கோழி நியாய விலையில் விற்பனைக்கு உண்டு. அரைக் கோழியும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம்செய்து கொடுக்கப்படும். 54/2, சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (59607)

### அறை வாடகைக்கு

யாழ் நகரில் மின்சாரம், தண்ணீர், மலசலகூட வசதிகள் உடைய அறைகள் வாடகைக்கு உண்டு. திங்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் பார்வையிடலாம். ந. விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (59645)

### தவறிவிட்டது

சுப்பிரமணியம்விஜேந்திரன் ஆகிய எனது விசேட அடையாள அட்டை, யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்திற்கும், ஞானவீர சனசமூக நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி பாடசாலையில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (சி/5077)

# சுன்னாகம் சந்தியில் வீதி ஒழுங்கு அமைப்பு

சுன்னாகம், ஒக். 5

சுன்னாகம் சந்தியில் நீள் முக்கோண வடிவிலான அமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

வீதி ஒழுங்கைப் பேணும் முகமாகச் சிமெந்தினால் இவை அமைக்கப்படுகின்றன. சுன்னாகம் சந்தியின் நாற்புறமும் இத்தகைய நான்கு அமைப்புகளை உருவாக்கும் வேலைகள் தற்போது நடைபெறுகின்றன.

இதேவேளை நீண்ட காலமாகக் கற்கள் பறிக்கப்பட்டிருந்து திருத்தப்படாதிருந்த சுன்னாகம் பஸ் நிலையப் பகுதியை உள்ளடக்கிய சுப்பிரமணியம் வீதித் திருத்த வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-27)

# இளந்திரையன் காலமானார்

புகழ்பெற்ற தமிழ் அறிஞரும், விமர்சகருமான சாலை இளந்திரையன் (வயது 68) நேற்று சென்னையில் காலமானார்.

புதுடில்லி பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராசிரியராக இருந்த இவர் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். (ஐ)

# அன்று அதிசய...

(நான்காம் பக்கத் தொடர்)

லாற்றுச் சிறப்பினைக் கொண்டதாகும். அன்றைய தினம் பிற்பகல் வேளையில் ஆலயத்திலிருந்து வங்கக் கடல்வரை மக்கள் வெள்ளத்தையே காணமுடியும். கடல் அலையோ, மக்கள் தலையோ என்று எண்ணும் அளவில் பக்தர் கூட்டம் நிரம்பி வழியும் காட்சியும் ஒரு கண்கொள்ளாக்காட்சியாகும்.

ஆலயங்கள் அனைத்திலும் நெற்றிப் பொட்டுக்கு சந்தனமே பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் நாமம் தான் நெற்றிப்பொட்டாகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது. இது ஒரு தனிச் சிறப்புக்கொண்டதாகும். ஆலய சுற்றாடலில் உள்ள நாமக்குளத்தில் நாமம் தோண்டி எடுக்கப்படுகிறது.

யுத்தத்திலே அர்ச்சுனனுக்கு தேரோட்டியாக நின்று கீதா உபதேசம்செய்து பஞ்சபாண்டவர்களைக் காத்த கிருஷ்ணபரமாத்மா அதர்மம் மேலோங்கி தர்மம் குன்றும் போது நல்லாரைக் காப்பதற்கும் கெட்டாரை அழிப்பதற்கும் யுகந்தோறும் நான் அவதரிக்கிறேன் எனக் கூறியது போல வல்லிபுரத்தில் சங்கு சக்கரமாக இருந்து மக்களைக்காத்து வருகிறார். காத்தற் கடவுளாகிய வல்லிபுரமாயவனை நாமும் வழிபட்டு நல்வாழ்வு வாழ்வோம்.

✠


# உலக ஆசிரியர் தினவிழா

06 — 10 — 1998

யா / மகாஜனக் கல்லூரி
தெல்லிப்பழை

மாணவர்களாகிய எம்மை வளம் பெறச்செய்யும் எமது ஆசிரியர்களை கௌரவிக்கும் ஆசிரியர் தின விழா எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (06 - 10 -19981 8-30 (மு. ப.) மணியளவில் எமது கல்லூரி மண்டபத்தில் (மருதனார்மடம்) செல்வன் வைத்தீஸ்வரன் சாரங்கன் தலைமையில் நடைபெறும். அத்தருணம் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

நன்றி!

(59653) — விழாக் குழுவினர்.



# சகல வர்த்தகர்களுக்கும் குறிஞ்சி மருந்தகத்தின் அறிவித்தல்

1. எட்னா சொக்லேட்ஸ்
2. WYETH & TORRENT மருந்து உற்பத்தி

ஆகியவற்றின் யாழ்ப்பாண விநியோகஸ்தர்கள் நாமே என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். யாழ் குடாநாட்டின் அநேகமான பகுதிகளுக்கு எமது வான் விநியோகஸ்தர்களால் இவையும் மற்றும் பல பொருள்களும் எடுத்துச் செல்லப்படுகின்றன. எமது பொருள்களைப் பெறமுடியாத நிலையிலுள்ள வர்த்தகர்கள் தயவு செய்து எம்முடன் உடன் தொடர்பு கொள்ளவும். எமது விசேட சலுகைகள் எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் வழங்கப்படும்.

குறிஞ்சி மருந்தகம்,
588, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-5083) தொ. பேசி: 021-2210


# மீண்டும் மாதகல் வரை பஸ் சேவை

சண்டிலிப்பாய், ஒக். 5

வீதி பலத்த சீர்கேடு அடைந்திருந்த காரணத்தினால் கடந்த மூன்று மாதங்களாக வட்டுக்கோட்டைச் சந்தியுடன் நிறுத்தப்பட்டிருந்த 789 ஆம் இலக்க யாழ்- மாதகல் பஸ் சேவை கடந்த வாரம் தொடக்கம் மீண்டும் மாதகல் வரை சேவையில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த பஸ் வண்டி செல்லும் வட்டுக்கோட்டை - சித்தன்கேணி - பண்டத்தரிப்பு பிரதான வீதி அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்டதை அடுத்து மீண்டும் இப்பாதை வழியாக போக்குவரத்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (ஐ-135)

# மரண அறிவித்தல்கள்

## கந்தப்பர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

(நிதி, நிர்வாக முகாமையாளர்
சென். நிக்லஸ் கல்வி நிலையம்)

சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்ட கந்தப்பர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அவர்கள் கொழும்பில் 01 - 10 - 98 வியாழனன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சின்னத்தங்கம் (அன்னை அம்மா) தம்பதிகளின் ஏக புத்திரனும், யோகேஸ்வரியின் (அவுஸ்திரேலியா) அன்புக் கணவரும், கணேசன் (பாபீரன்), காயத்திரி (கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 04 - 10 - 98 ஞாயிறன்று கொழும்பில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஆ. விஸ்வலிங்கம்
(ஓவசியர்)

இறைசுவர் வளவு,
7, மயிலணி ஒழுங்கை,
மயிலணி, சுன்னாகம்.

(59647)

## பொன்னம்பலம் கனகம்மா

காலஞ் சென்ற டாக்டர் பொன்னம்பலத்தின் (சீனிவாசகம்) அன்பு மனைவி கனகம்மா காலமாகி விட்டார்.

அன்னார் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, 154, புதுச் செட்டித் தெருவை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் சுந்தரலிங்கம் (கனடா), சொர்ணலிங்கம் (துபாய்), கணேசலிங்கம் (கனடா) காலஞ்சென்ற ஆனந்தலிங்கம் சர்வகுணதேவி (கொழும்பு), பஞ்சலிங்கம் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத்தாயாரும் வசந்தி, குணராணி, சுந்தரி, சண்முகநாதன், திருமதி பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதா, தட்சாயினி, முரளிதரன், கோபிநாத் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ் சென்ற தம்பிமுத்து, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார். அன்னாரின் தகனக்கிரிகை 5 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. சறோஜினிதேவி
(மருமகள்)

55, நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை.

(59652)

## திரு. குமாரசாமி இரகுநாதன் திருமதி இரகுநாதன் சித்திரா

வட்டுக்கோட்டை அரசடி வீதியைச் சேர்ந்த திரு. கு. இரகுநாதன், திருமதி இ. சித்திரா (கூட்டுறவு பரிசோதகர் வவுனியா) தம்பதிகள் 29-09-98 இல் அகால மரணமடைந்தனர்.

இவர்கள் மூளாயைச் சேர்ந்த காலஞ்சென்ற சட்டத்தரணி திரு. ச. குமாரசாமி திருமதி கு. தேன்மொழி தம்பதியினரின் ஏக புதல்வனும், மருமகளும். திருமதி ம. சுமதினியின் அன்புச் சகோதரனும், மைத்துனியும், திரு. பூ. மகேந்திரனின் (வலி. வடக்கு பிரதேசசபை) மைத்துனரும், சகலியும் செல்வன் ம. சசிகரன், செல்வன் ம. அஜந்தன் (யூனியன் கல்லூரி தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமா, மாமியும், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த Dr. சுப்பிரமணியம், கனகரத்தினம் (Retired R M O) திருமதி க. அமிர்தவல்லி அம்மா (முன்நாள் ஆசிரியை இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு) தம்பதியினரின் கனிஷ்ட பாசமிகு புதல்வியும், மருமகனும் திருமதி வை. அருட்செல்வி. திருமதி செ. கிருபாதேவி (A M O, மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மைத்துனரும் திரு க. வைக்கிலிங்கம் வர்த்தக முகாமையாளர் (J D A P M C C S Ltd) திரு. ஆ. செல்வராஜா (M. Sc. Retired Research Officer DeptOf Agriculture) ஆகியோரின் மைத்துனியும் சகலனும், செல்வன் செ. கிரிகரன் (யாழ்ப்பாணக்கல்லூரி வட்டுக்கோட்டை) செல்வி செ. சிவானி (யாழ். வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு சிற்றன்னையும், சித்தப்பாவுமாவர்.

இவ்வறிவித்தலை அன்புள்ளங்கொண்ட அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. சு. கனகரட்ணம்,
(தந்தையும், மாமனாரும்)

டிக்கஸ் லேன்,
உடுவில் வீதி,
மானிப்பாய்.

(59646)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகள் தயாரித்த ஹெலி பற்றி

# மேலும் தகவல் கிடைத்துள்ளதாம்

கொழும்பு, ஒக். 05

விடுதலைப் புலிகள் ஹெலிக்கொப்ரர் ஒன்றை வெள்ளோட்டம் விட்டிருப்பதாக அண்மையில் கொழும்பு சிங்களப் பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியாகியிருந்தது தெரிந்ததே. அது தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினருக்கு மேலும் தகவல்கள் கிடைத்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் அண்மையில் வெள்ளோட்டம் பார்த்த ஹெலிஹொப்ரர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்ட உதிரிப்பாகங்களைக் கொண்டு முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் உருவாக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சுக்கு தகவல் கிடைத்துள்ளது.

1976 ஆம் ஆண்டு வவுனியாவில் உள்ள காமினி மகாவித்தியாலயத்தில் சிங்கள மொழி மூலம் கல்வி கற்ற தமிழ் இளைஞர் ஒருவர் கனடாவில் விமானப் பொறியியல் நெறியைப் பயின்ற பின்னர் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைந்துள்ளார் எனவும் —

ஜெகநாதன் என்ற பெயருடைய அவர் தற்போது விடுதலைப்புலிகளால் 'மிக்' என்ற பெயரில் அழைக்கப்படுகின்றார் என்றும் —

1981 இல் விடுதலைப் புலிகள் தயாரித்த சிறிய விமானத்தையும் இவரே தயாரித்தார் எனவும் —

அந்தச் சிறிய விமானம் வெள்ளோட்டத்தின் போதே சேதமடைந்தது எனவும் —

பாதுகாப்புப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

விடுதலைப்புலிகள் அமைப்பில் ஜெகநாதன் இணைந்த பின்னர் அவர் அந்த அமைப்பின் வான் பிரிவிற்குப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார் —

ஏவுகணைகள் மூலம் விமானங்களைத் தாக்கி அழிப்பது மற்றும் 'பைசிரோ' துப்பாக்கிகள் தொடர்பான பயிற்சிகளை ஜெகநாதனைப் பயன்படுத்தியே விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர் —

விடுதலைப்புலிகளுக்கு புதிதாக ஹெலிகளைத் தயாரித்த ஜெகநாதன் முன்னர் வெளிநாட்டில் வசித்த தனது நண்பர்களின் ஒத்துழைப்பையும் உபகரணங்களையும் அவர்களிடமிருந்து பெற்றுள்ளார் —

ஒரு ஹெலியுடன் நிறுத்திவிடாது மோட்டார் சைக்கிள் எஞ்சினைப்பயன்படுத்தி பல தாக்குதல் விமானங்களைத் தயாரிக்க விடுதலைப் புலிகள் எண்ணியுள்ளனர் என படையினரால் சிறைப்பிடிக்கப்பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர் —

ஜெகநாதனால் தயாரிக்கப்பட்ட ஹெலி கடந்த மாதம் 18 ஆம் திகதி வெள்ளோட்டம் விடப்பட்டதாக படையினருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

வெள்ளோட்ட நிகழ்வின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் மற்றும் புலிகள் அமைப்பின் முக்கிய உறுப்பினர்களும் கலந்துகொண்டனர் —

முல்லைத்தீவில் உள்ள முருகன் கோவில் ஒன்றில் விசேட பூஜைகள் நிகழ்த்தப்பட்டதாகவும் அவ்வேளை அக் ஹெலியில் இருந்து அக் கோவிலின் மீது மலர் தூவப்பட்டதாகவும் —

பாதுகாப்புத்துறையினருக்குத் தகவல் கிடைத்துள்ளதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10-7)

## நகைக் கடைத்திருட்டு

# சந்தேக நபர்களுக்கு நீதிவான் எச்சரிக்கை

யாழ். கஸ்தூரியார் வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றிலிருந்து நகைகளைத் திருடியதாக குற்றம் சாட்டப்பட்ட நான்கு சந்தேக நபர்களையும் யாழ். மாவட்டத்துக்கு வெளியே செல்ல விடாது கண்காணிக்குமாறு யாழ். சிவில் நிர்வாக பிரிவுக்கு அறிவிக்குமாறு யாழ். நீதி மன்ற மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார்.

இந்த நான்குசந்தேகநபர்களும் கடந்த வெள்ளியன்று நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்ட பின் மேற்படி உத்தரவை நீதிவான் பிறப்பித்தார்.

இந்த வழக்கில் குணரத்தினம் குணநேசன், கறுப்பையா கணேசன், இராஜகோபால் இராஜேந்திரன், குருசாமிச் செட்டியார் ஆகிய நான்குபேருமே குற்றம் சாட்டப்பட்டவர்களாவர்.

இந்த வழக்கு இம்மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (இ-15-5)

## யாழ். மாவட்டத்தை சேர்ந்த

# மேலும் ஐந்துபேருக்கு எழுதுநர் நியமனம்

நவாலி, ஒக். 5

யாழ். மாவட்டத்திலிருந்து மேலும் 5 பேர் எழுது வினைஞர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள், 244, காலி வீதி, கொழும்பிலுள்ள யாழ்ப்பாண மாவட்ட செயலக இணைப்பு அலுவலகத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. நியமனங்கள் 1-10-98 முதல் வழங்கப்பட்டுள்ளன.

பின்வரும் பெயர் முகவரி உடையோர் கொழும்பு சென்று நியமனக் கடிதங்களை பெற்றுக் கொள்ளுமாறு யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

எஸ். முத்தையா (அரங்கம், இணுவில் மேற்கு, சுன்னாகம், அரச கருமமொழித் திணைக்களம்), செல்வி எஸ். தயாரஞ்சினி (இராஜ வீதி, நீர்வேலி — பரீட்சைத் திணைக்களம்.) எஸ். துரைசிங்கம் (ஆர். சி. தேவாலய வீதி, உடுவில்- சுன்னாகம் — பொலீஸ் திணைக்களம்.) செல்வி கி. செல்வகௌரி ("மணிவிலா" பிரதான வீதி சுன்னாகம் — பொலீஸ் திணைக்களம்), செல்வி ரி. வாசுகி (கோயில் கடவை, துன்னாலை மத்தி கரவெட்டி — கமநல சேவைகள் திணைக்களம்.) (ஐ- 100)

# ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் பகுதிகளில் திருடர் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 5

ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம் பகுதிகளில் திருடர் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் பெரும் பீதி அடைந்துள்ளனர்.

மேலும் திருட்டுத் தொழிலில் ஈடுபடுபவர்கள் மயக்க மருந்தை பயன்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவும் இப்பகுதியில் இடம்பெற்ற ஒரு திருட்டுச் சம்பவத்தில் இரவு வீட்டினுள் நுழைந்த திருடர்கள் கணவன் படுத்திருந்த அறையை திறக்கமுடியாதவாறு கயிறு கொண்டு கட்டிவிட்டு மனைவி படுத்திருந்தஇடத்திற்குச் சென்று அவரை நித்திரையில்இருந்து எழுப்பினர் என்றும் —

அவர் அணிந்திருந்தபெறுமதி மிக்க தாலிக்கொடியை அபகரித்துக்கொண்டதுடன் மயக்க மருந்தையும் அவர் மீது விசிறிவிட்டுச் சென்றதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

(இ-15-17)

## வைரவிழா

வலிகாமம் தெற்கு ஒக். 5

அளவெட்டி சங்கீத ஆலோசகர் வி. கே. நடராசா அவர்களின் வைரவிழா இன்று திங்கட்கிழமை காலை அளவெட்டி கும்பழாவளை விநாயகர் ஆலய மண்டபத்தில் பிரம்மஸ்ரீ இ. சோமசுந்தரேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பிரம்மஸ்ரீ ந. வீரமணி ஐயர், அருட்கவி சீ. விநாசித்தம்பி ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

மல்லாகம் மாவட்ட நீதிவான் மு. திருநாவுக்கரசு, கோட்டக்கல்வி அதிகாரிகளான ஆ. கமலநாதன் (தெல்லிப்பழை) எஸ். கணேசலிங்கம் (சங்கானை) அ. தற்பரானந்தன் (உடுவில்) திருமதி ஆர். இருதயநாதன் (சண்டிலிப்பாய்) ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

சங்கீத பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை, அ. மு. அருணாசலம் அதிபர், கி. மகேந்திரராஜா அதிபர், நாதஸ்வர வித்துவான் இ. கேதீஸ்வரன் உட்பட பலர் வாழ்த்துரை வழங்குவர். (ஐ-152)

## நூல் வெளியீடு

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர் தர வளர்ச்சிக்கு உதவக் கூடியதாக கலாநிதி சபா. ஜெயராஜாவின் 'புதிய கற்பித்தலியல்' என்னும்நூலை பட்டதாரி ஆசிரிய வாண்மை விருத்தி அமைப்பினர் வெளியிட்டுள்ளனர். (ஐ-8)

## மிதிவெடி கண்டுபிடிப்பு

யாழ். போதனா வைத்தியசாலை வளவினுள் நேற்றும்ஒருமிதிவெடி கண்டெடுக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலை கண் பரிசோதனை நிலையத்துக்கு முன்பாக யாழ். கட்டடத் திணைக்கள நீர் விநியோகப் பகுதியினர் நீர்க் குழாய்களைப் பொருத்த கிடங்கு வெட்டியபோதே இந்த மிதிவெடி கண்டு பிடிக்கப்பட்டது.

அதுபற்றி உடன் ஆஸ்பத்திரிப் பொலீஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது என்றும் —

அவர்கள் அதை எடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-139-15)

## மகளிர் அபிவிருத்தி நிலைய

# மனைப் பொருளியல் பயிற்சி நெறிகள்

யாழ்ப்பாணம், ஒக். 5

மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் பெண்களுக்கான மனைப் பொருளியல் பயிற்சிநெறியின் புதிய வகுப்புக்கள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன.

இந்தப் பயிற்சி நெறியில் நவீன உடைகள் தயாரித்தல், நவீன சிற்றுண்டி வகைகள், சிகை அலங்காரம், கொண்டாட்டங்களுக்கான கேக் வகைகள் தயாரித்தல் போன்ற துறைகளில் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சிகள் அனைத்தும் அந்தந்தத் துறைகளில் நிபுணத்துவம் பெற்ற ஆசிரியைகளால் நடத்தப்படும். பயிற்சிகளை முடித்து வெளியேறும் மாணவிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்தப் பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்டு வெளியேறிய மாணவிகள் வருமானம் தரக்கூடிய முன்னேற்றமான சுய தொழில் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்று மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ-6)

## வாசகர் திருமுகம்

# மக்களைப் பாதித்த 'லஞ்சம்'

யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதியொன்றிலுள்ள கிராமசேவகர் ஒருவரின் நாணாந்த நடவடிக்கையினால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள மீன் சந்தையில் நுகர்வோர் பகுதியை விடுத்து மீன் சந்தைப்படுத்தும் பகுதிக்குச் செல்லும் மேற்படி கிராமசேவகர் தனது பிரிவுக்குட்பட்டு வாழும் சிலரை பெயர்கூறி அழைத்து இலவசமாக மீனைப் பெற்றுச் செல்வார். தனது மீன் தேவையைப் பூர்த்தி செய்பவர்களே நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் என இவரால் தெரிவு செய்யப்பட்டனர். உண்மையில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பலர் அதாவது லஞ்சம் வழங்க வசதியற்றவர்கள் நிவாரணம் பெற சிபாரிசு செய்யப்படவில்லை.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் தனக்கு நிவாரணம் கிடைக்கவில்லை என முறையிட அவரை விரட்டியிருக்கிறார். இப்படிப்பட்ட கிராமசேவையாளர்களால் கடமையை கண்ணுங் கருத்துமாகச் செய்பவர்களின் மீதும் தப்பான அபிப்பிராயம் ஏற்பட ஏதுவாகின்றது.

இத்தகைய கிராமசேவகரினால் இப்பகுதி மக்கள் அனுபவிக்கும் துன்பம் தொடருமா? இவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? அல்லது தானே தவறை உணர்ந்து திருந்துவாரா?

பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர்

பாஷையூர்.

# ஒலிபெருக்கியும் நாமும்

ஏற்கனவே இப்பத்திரிகையில் ஒலிபெருக்கியை நாம் தவறாகப் பயன்படுத்துவது பற்றி எழுதப்பட்டிருக்கிறது. நாளுக்கு நாள் இது அதிகரித்துக் கொண்டே போவது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. கோயில்களிலேதான் ஒலிபெருக்கி அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் இதைப் பொறுத்துக் கொண்டிருப்பதற்கு "நமக்கேன் வம்பு" என்பன போன்ற பல காரணங்கள் இருந்தாலும் ஏதோ பக்தி சம்பந்தமாகப் போகிறது என்னும் முக்கிய காரணம் முன்னிற்கிறது.

கொஞ்சம் ஆழமாகப் பார்த்தால் எத்தனையோ பேருடைய படிப்பை, நித்திரையைக் குழப்புகின்ற ஒலி பெருக்கிக்கும், கடவுள் வணக்கத்திற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. யாரோ ஒரு சிலருடைய தவறான நடவடிக்கைதான் காரணம்.

கோயிலைத் திறந்து ஆரம்ப அலுவல்களைத் தொடங்கும்போதோ அல்லது அதற்கு முன்னரோ ஒலி பெருக்கியை இயக்கி விடுவது வழமையாகி விட்டது. பின்னர் பூசைக்கான மந்திரங்கள் ஒலிப்பதற்கும் வேறு கிரியைகள் நடை பெறுவதற்கும் நீண்ட நேரம் எடுக்கும்.

எமக்குக் கிடைத்திருக்கும் சில வசதிகளை வைத்துக்கொண்டு நாங்கள் எம்மால் செய்யப்பட்டுவந்த விஷயங்களைச் சுலபமாக்கியுள்ளோம். அதே வரிசையில் வீட்டிற்கு வருபவர்களை நாம் வரவேற்காமல் 'நல்வரவு' போன்றவற்றை எழுதி விடுவது. தேவாரம் போன்றவற்றை ஓத முன்வராமல் ஒலிப்பதிவு நாடாவை ஓட விட்டுக்கொள்வது என்று நாம் சில வழிமுறைகளைக் கைக்கொள்ளத் தொடங்கியிருக்கிறோம். இதன் காரணமாக அவ் விஷயங்களில் இருக்கும் அடிப்படை நோக்கம் கைவிடப்படுவதை நாம் கவனத்திற் கொள்வதில்லை என்பது மாத்திரமல்ல ஒழுக்கக் கேட்டுக்கும் வழிவகுக்கிறோம். நாம் சிறுவர்களாக இருக்கும் போது தேவாரம் ஓதப்படுவது காதில் கேட்டால் ஆசனத்தில்இருப்பதையோ படுத்திருப்பதையோ கூடியவரை தவிர்த்துக்கொள்ள பழகியிருந்தோம். ஒலிபெருக்கி காரணமாக இது கைவிடப்படவேண்டியேற்பட்டுவிட்டது.

சனங்கள் நெருக்கமாக வசிக்கும் இடங்களில் இவ்வொலிபெருக்கி உபயோகத்தால் நோயாளர், குழந்தைகள் முதற்கொண்டு மாணவர்கள் ஆராய்ச்சியாளர்கள் வரை கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். இதிலிருந்து மீள்வதற்கு உள்ள இரண்டு வழிகளில் ஒன்றாகியசட்டம்இப்போதைக்குக்கைகொடுக்காது. அது நன்மையானதுமல்ல. மற்ற வழியானதாமாகவே திருந்தும் நிலைக்குத்தான் செல்ல வேண்டும். அதற்குதவ சமூகத்திலுள்ள பெரிய மனிதர்கள் முன்வரவேண்டும்.

வை. சந்திரபாலன்.

கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டியபுலத்தில் 87 குடும்பங்கள்
# போதிய வசதிகள் இன்றிப் பாதிப்பு

வலிகாமம்தெற்கு, ஒக். 5

அடிப்படை வசதிகள் ஏதுமற்ற நிலையில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட குட்டியபுலம் கிராமத்தில் சுமார் 87 குடும்பங்கள் மிகக் கஷ்டமான நிலையில்தமது வாழ்க்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

சுகாதார வசதிகள், மருத்துவ வசதிகள், குடிநீர், இருப்பிட வசதிகள், உணவு விநியோக வசதிகள் அற்ற நிலையில் சிறுசிறு கொட்டில்களை அமைத்து அதில் வாழ்ந்து வருகின்றனர்.

இம் மக்களுக்கு வழங்கப்படும் இலவச உலர் உணவு நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளக் கூட இவர்கள் பல மைல் தூரம் செல்லவேண்டியுள்ளது.

சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் தமது சொந்த இருப்பிடமான கட்டுவன் கிராமத்தை விட்டு வெளியேறிய இக் குடும்பங்கள் குட்டிய புலத்திலே உள்ள கந்திரபுரத்தில் குடியமர்த்தப்பட்டனர்.

இம் மக்களின் சுகாதார தேவைகள் சிலவற்றைப் போக்குவதற்கு வலிகாமம் வடக்குப் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளரின் அனுசரணையுடன் தெல்லிப்பழை பொதுச் சுகாதார பரிசோதகர் சச்சிதானந்தனும், சுகாதாரக் குழுவினரும் முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

இம் மக்களின் முக்கிய சுகாதார தேவைகளான மலசலகூடங்கள், கிணறுகள் அமைத்துக் கொடுப்பதற்கான இடத்தெரிவுகள் இவர்களால் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டது.

முப்பத்திரண்டு மலசல கூடங்கள் மூன்று கிணறுகள் உடனடியாக இப்பகுதியில் அமைத்துக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்ப நடவடிக்கையாக இவற்றை சுகாதார முறைப்படி பொருத்தமான இடங்களில் அமைப்பதற்கான இடத்தெரிவுகளை குட்டியபுலம் கிராம அலுவலரும், தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகரும், சுகாதாரக்குழுவினரும் இணைந்து மேற்கொண்டனர்.

இப்பிரதேச மக்கள் தமது தேவைகளுக்கென ஆயுர்வேத வைத்திய நிலையம், கூட்டுறவுச் சங்கக்கிளை ஆகியவற்றையும் விரைவில் அமைத்துக் கொடுக்குமாறு கோரியுள்ளனர். (ஐ-152)

## திருமுறை பாராயணம்

யாழ்ப்பாணம், ஒக். 5

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்தம் நடத்தி வரும் பௌர்ணமி தின பன்னிருதிருமுறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத்திரட்டு, முற்றோதல் ஆகியன இன்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு வண்ணார்பண்ணை அரசடிப் பிள்ளையார் ஆலயத்தில் மன்றத்தலைவர் வ. பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளன. (ஐ-8)

# உயிரிழந்த மேலும் 15 பேரின் விவரம்
## புலிகள் அறிவிப்பு

வவுனியா, ஒக். 5

கிளிநொச்சி மற்றும் மாங்குளம்பகுதியில் கடந்த 29 ஆம் திகதி முதல்நேற்றுமுன்தினம் வரை இடம்பெற்ற மோதல் மற்றும் குண்டு வெடிப்புச் சம்பவங்களில் உயிரிழந்த மேலும் 15 பேரின் விவரங்களை விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே 95 பேரின் விவரங்கள் அறிவிக்கப்பட்டிருந்தன.

15 பேரின் விவரங்கள் வருமாறு:

★ தமிழ்பாலன் (நல்லையா ஜெகதீஸ்வரன்- மண்டைதீவு)
★ இந்திரன் (நாகராசா சசிகரன் — யாழ்ப்பாணம்)
★ கலையழகன் (ஜேசுதாஸ் ரமேஷ்குமார்- யாழ்ப்பாணம்)
★ ஆனந் (தங்கையா பாலச்சந்திரன் — மட்டக்களப்பு)
★ கயல்விழி (இராசரட்ணம் சிவராசா — திருமலை)
★ கருணாகரன் (வேலாயுதம் அசோக்— திருமலை)
★ காவலன் (நாகரத்தினம் புவனேந்திரராசா—திருமலை)
★ சின்னரசு (சண்முகராஜா தேவதாஸ் — திருமலை)
★ கேசரி (காசிப்பிள்ளை ஆனந்தகுமார்— பரந்தன்)
★ வெண்சுடர் (ஆறுமுகம் சுகானந்தன் — கிளிநொச்சி)
★ ஈழவேந்தன் (செபஸ்ரியாம்பிள்ளை ஜீவரட்ணம் — உடையார்கட்டு)
★ அமலதீபன் (தம்பிப்பிள்ளை கோபாலகிருஷ்ணன் — மட்டக்களப்பு)
★ பொன்னழகன் (துரைராசா சிவனேஸ்வரன் — கிளிநொச்சி)
★ குன்றச்சோழன் (சண்முகம் உதயகுமார் —பரந்தன்)
★ அகிலன் (சாந்தலிங்கம் சுரேஸ்குமார் — ஒட்டுசுட்டான்) (இ-7)

## அறிவியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக். 5

இணுவில் தெஸ்பியன் கலைவட்டம் நடத்தி வரும் மாதாந்த அறிவியற் கருத்தரங்குத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு இணுவில் தெஸ்பியன் கல்வி நிலயத்தில் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி 'உயர் கல்வித் தெரிவுகள்- சில வழிகாட்டல்கள்'' என்ற தலைப்பில் கருத்துரை வழங்குவார். (ஐ-8)


### யாழ். மாவட்ட
### பேக்கரி உரிமையாளர் சங்கம்
### தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்
### பதவி - தமிழ்

கல்வித் தகைமைகள்:
க. பொ. த. சாதாரணதரத்தில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
மேலதிக தகைமை:
ஆங்கிலத்தில் தட்டெழுத்தில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
அனுபவம்:
2 வருடம் ஏதாவதொரு நிறுவனத்தில் கடமையாற்றி இருத்தல் வேண்டும்.
வயது: 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.
சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் இருவரின் பெயர்சுடன் சொந்தக் கைபெழுத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 15 - 10 - 98 இற்குள் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

யா. மா. பே. உ. சங்கம்,
119, பிரதான வீதி,
(புதிய இலக்கம்)
317 (பழைய இலக்கம்),
யாழ்ப்பாணம்.

(சி/5057)

### 7 ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 22 — 07 — 1924 | 23 — 09 — 1991 |

**அமரர் S.R. பொன்னம்பலம்**
(ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர், கோவிலாக்கண்டி,)

திதி: 05 — 10 — 98

ஆண்டேழு சென்றாலும் அழுது புரண்டாலும்
மண்ணுலகில் நாம் உள்ளவரை
மாறிடுமோ எமது துயர்!

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி

மீசாலை. (59422)

கொக்குவில் ஞானபண்டித வித்தியாசாலை அருகில்
SPOKEN ENGLISH
By: BRITTO
புதிய பிரிவு
06 - 10 - 98
செவ்வாய் - வியாழன்
3-00 மணி
(சி/5080)

### A/L DAY CLASS
07 - 10 - 98
9-00 மணி
PHY. - பரந்தாமன் ராகவன்
CHE. - அன்பழகன்
ZOO. - வழமையான ஆசிரியர்
**CASIO INSTITUTE**
கல்வியங்காடு
(59643)

### வைத்தியம்
செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.
வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(59631)

### வாழ்த்துகின்றோம்
கிளி/வேம்போடுகேணி சி. சி. த. க பாடசாலையில் கற்பித்துக்கொண்டிருக்கின்ற, கற்பித்துச் சென்ற அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மனமுவந்து வாழ்த்துகின்றோம்.

பெற்றோர், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
நலன்விரும்பிகள்.

பாடசாலை அபி சங்கம்
கிளி/ வேம்போடுகேணி சி. சி. த. க. பா.
இத்தாவில் - பளை.
(சி/5078)

### T.Vக்கள் விற்பனைக்கு
Sony 2030, 2032, 2072, 2060 National நியூ ரீ.விக்கள் போன்ற பல ரகங்களில் விற்பனைக்கு உண்டு.
சகல ரீ.விக்கள், டெக், ரேடியோ, மணிக்கூடுகள் என்பனவும் திருத்தித் தரப்படும்.
மற்றும்
குறைந்த கட்டண தொலைத் தொடர்பிற்கு
**வீனஸ் டெல்கா,**
284, ஸ்ரான்லி வீதி,
(நாகவிகாரை முன்பாக)
யாழ்ப்பாணம். TEL. 2064
கிளை:- பஸ் நிலையம்,
சாவகச்சேரி.
(சி/5054)

### பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ். பல்கலைக்கழகம் சைவத்திற்கும் தமிழுக்கும் நறபணி ஆற்றியமையைக் கௌரவிக்கும் முகமாக
இலக்கிய கலாநிதிப்பட்டத்தை வழங்கும்
சிவத்தமிழ்ச் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களையும்
பண்டிதர் **மு. கந்தையா**
அவர்களையும்
அத்துடன் முப்பத்தெட்டு வருடங்கள் பல்கலைக்கழகத்தில் நற்சேவையை ஆற்றியமைக்காக
முதுமாணிப் பட்டத்தைப் பெறும்
**திரு. த. காசிநாதன்**
அவர்களையும்
மேலும் நற்பணிகள் பல செய்து நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், நலன்விரும்பிகள்.
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்
சுதுமலை. (59633)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா
# 870 பேர் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம், ஒக். 5
யாழ். பல்கலைக்கழகத்தின் 17 ஆவது பட்டமளிப்பு விழா நேற்றுச் சிறப்பாக நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் மூன்று அமர்வுகளாக இடம்பெற்ற இப் பட்டமளிப்பு விழாவில் 870 பேர் கௌரவிக்கப்பட்டனர்.

பட்டமளிப்பு விழாவை முன்னிட்டு நேற்று யாழ். பல்கலைக்கழகம் விழாக்கோலம் பூண்டிருந்தது.

வர்ணக் கொடிகளாலும், அலங்கார தோரணங்களினாலும் பல்கலைக்கழகம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பல்கலைக்கழகப் பிரதான வாயிலில் இருந்து கௌரவப் பட்டம் பெறுபவர்களும், கௌரவிக்கப்படுபவர்களும், விரிவுரையாளர்களும் மங்கள வாத்தியங்கள் முழங்கக் கைலாசபதி கலையரங்குக்கு அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுக்குப் பின்னால்— இறுதியாக —துணைவேந்தர் குடை, ஆலவட்டம் சகிதம் அழைத்து வரப்பட்டார்.

அவருடன் பதிவாளர் மற்றும் பீடாதிபதிகளும் அழைத்துவரப்பட்டனர்.

கலையரங்கிலே துணைவேந்தர் மங்கள விளக்கேற்றி நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

முதலில் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு துணைவேந்தர் 'கலாநிதி' பட்டம் வழங்கிக் கௌரவித்தார். கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை அறிமுகம் செய்து உரை நிகழ்த்தினார்.

அடுத்து மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி இ. இராஜேந்திரபிரசாத், பேராசிரியர் கந்தையா பாலசுப்பிரமணியத்தை அறிமுகம் செய்து வைக்க விஞ்ஞான கலாநிதிப் பட்டத்தை துணைவேந்தர் வழங்கினார்.

அதன் பின்னர் விவசாய பீடத் தலைவர் எந்திரி இ. விஜயரத்தினம், காலஞ்சென்ற கலாநிதி நடராஜா விக்னராஜாவை அறிமுகம் செய்துவைக்கத் துணைவேந்தர் அவருக்குத் தேகாந்த நிலையில் விஞ்ஞான கலாநிதிப்பட்டத்தை வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து விஞ்ஞானமாணி, மருத்துவ சத்திர சிகிச்சைமாணி, பட்டப்பின் கல்வித் தகைமைச் சான்றிதழ், தொழில் நிர்வாகமாணி போன்ற பட்டங்களைப் பெறுவதற்குத் தகுதி பெற்றவர்களுக்குத் துணைவேந்தர் பதக்கங்களை அணிவித்துக் கௌரவித்தார்.

இரண்டாவது அமர்வில் விஞ்ஞானபீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் காலஞ்சென்ற பேராசிரியர் சி. மகேஸ்வரனை அறிமுகம் செய்துவைக்க துணைவேந்தர் அவருக்கு தேகாந்த நிலையில் விஞ்ஞான கலாநிதிப்பட்டத்தினையும்—

கலைப்பீடப் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் ஏழாலையூர் பண்டிதர் முத்தர் கந்தையாவை அறிமுகம் செய்துவைக்க துணைவேந்தர் அவருக்கு இலக்கிய கலாநிதிப்பட்டத்தையும்—

விஞ்ஞான பீட பேராசிரியர் இ. குமாரவடிவேல், தா. சோமசேகரத்தை அறிமுகம் செய்துவைக்க துணைவேந்தர் அவருக்கு கலாநிதி பட்டத்தையும் — வழங்கிக் கௌரவித்தார்.

மூன்றாவது அமர்வில் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், பல்கலைக்கழகத்தின் முன்னாள் பிரதிப்பதிவாளர் த. காசிநாதனை அறிமுகம் செய்துவைக்கதுணைவேந்தர் அவருக்கு முதுமாணிப்பட்டத்தையும்—

வவுனியா வளாகத் தலைவர் பேராசிரியர் நா. பாலகிருஷ்ணன் சார்பாக யாழ். மருத்துவபீட விரிவுரையாளர் எஸ். பரமேஸ்வரன், பேராசிரியர் கா. சிவத்தம்பியை அறிமுகம் செய்து வைக்க அவருக்கு துணைவேந்தர் இலக்கிய கலாநிதிப் பட்டத்தையும்—

இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களை அறிமுகம் செய்து வைக்க துணைவேந்தர் அவருக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தினையும் வழங்கினார்.

பட்டமளிப்பு சிறப்பாக நடைபெற்ற போதிலும் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்து தடைப்பட்டிருப்பதனால் பட்டங்களைப் பெற இருந்த சிலரும் கௌரவிக்கப்பட இருந்த பட்டதாரிகள் பலரும் பட்டமளிப்பில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினரின் திருவாசக முற்றோதல் விழா இன்று காலை 6 மணிக்கு சாவகச்சேரி பெரியமாவடி பள்ளபுலம் கந்தசாமிதேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது. (இ-117)

## சமய நிகழ்வில்

உரும்பிராய் அருள்மிகு ஸ்ரீ பர்வதவர்த்தனி அம்மன் கோயிலில் இன்று மாலை 4.30 மணிக்கு பௌர்ணமி தின திருவிளக்குத் திபபூசைகள் நடைபெறும். பின்பு அம்பாள் வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (இ-30)

★ ★ ★

திருநெல்வேலி சத்யசாயி பாபா சமித்தியில் இன்று காலை பூசை, வழிபாடும், சாயி பஜனையும் பின்னர் டாக்டர் சிவஞானசுந்தரத்தின் சமய விரிவுரையும் இடம்பெறும். (இ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் கோயிலில் இன்று மாலை 4.30 மணிக்கு பூரணைதின விசேட அபிஷேகம், பூசை நடைபெறும். பின்னர் திருவிளக்கு சுமங்கலி பூசை வழிபாடுகள் இடம்பெறும்.

பின் அம்பாள் வீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பார். (இ-30)

★ ★ ★

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று காலை 8.00 மணிக்கு ஸ்ரீ மகாலெட்சுமி தேவிக்கு விசேட அபிஷேகம் பூசையும், பிற்பகல் 3.00 மணிக்கு சுமங்கலிகள் திப பூசை உற்சவமும் நடைபெறும். (இ-30)

## சிப்பாய் சரண்

கொழும்பு, ஒக். 5
கடந்த ஓகஸ்ட் மாதம் மட்டக்களப்பு வவுணதீவு இராணுவ முகாமில் இருந்து தப்பியோடிய இரண்டு படையினரில் ஒருவர் நேற்று முன்தினம் பிற்பகல் பொலீஸாரிடம் சரணடைந்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிப்பாய் மகாஓயாவில் உள்ள விசேட அதிரடிப் படை முகாமில் சரணடைந்தார். இவருடன் தப்பியோடிய முஸ்லிம் சிப்பாய் இன்னும் தலைமறைவாகவே உள்ளார்.

அதேவேளை—

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலிருந்த இரு இராணுவ வீரர்களில் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் —

இவர்களில் சிங்கள இராணுவ வீரர் நேற்று முன்தினம் மகாஓயாவில் வைத்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் —

முஸ்லிமான மற்ற இராணுவ வீரர் தொடர்ந்து விடுதலைப் புலிகளுடன் இருப்பதாகவும் —

விடுதலையான இராணுவ வீரர் மகாஓயா பொலீஸில் தெரிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-6-21)

## சோளம்பயிர்ச்செய்கையை ஊக்குவிக்கக் கோரிக்கை

வலிகாமம் வடக்குப் பகுதியில் சோளம் பயிரிடலை ஊக்குவிக்குமாறு வலி. வடக்கு பிரதேச செயலர் பத்தினியம்மா திலகநாயகம் போல் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில்கலந்து கொண்ட பிரதிநிதிகளிடமே அவர் இக் கோரிக்கையை விடுத்தார்.

கோழித்தீன் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு சோளம் பயிரிடல் ஊக்குவிக்கப்பட வேண்டுமெனவும்—

இப்பகுதியிலுள்ள ப.நோ. கூ. சங்கங்கள் கோழித்தீன் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவி உற்பத்தியை மேற்கொள்வது பயனுள்ள பணியாக இருக்கும் எனவும் அவர் சம்பந்தப்பட்டோரிடம் கேட்டுக்கொண்டார். (ஐ-27)

## வல்லிபுர தேர்விழாவில் ஆயிரக்கணக்கில் பக்தர்

வடமராட்சி வல்லிபுராலய மகோற்சவத்தேர்த்திருவிழா நேற்றைய தினம் சிறப்பாக நடைபெற்றது. இத்திருவிழாவில் பெருந்திரளான அடியவர்கள் கலந்து கொண்டனர்.

அடியவர்களின் வசதி கருதி விசேட பஸ் சேவைகளும் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையினரால் நடத்தப்பட்டன.

வடமராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து ஆலயத்துக்குச் சென்ற பக்தர்கள் வல்லிபுரம் சோதனைச் சாவடியில் விசேட அனுமதி பெற்றுச் சென்றனர்.

தேர் உற்சவவேளை ஏராளமான பக்தர்கள் காவடி, கற்பூரச்சட்டி, தூக்குக் காவடி, பறவைக்காவடி எடுத்தும் அங்கப்பிரதிஷ்டை செய்தும் தமதுநேர்த்திகளை நிறைவேற்றினர்.

தேர் உற்சவ நிகழ்வுகள் யாவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் நேரடி அஞ்சல் செய்யப்பட்டன. (இ-15-36-173-139)

## 730 கடற்படையினர் பயிற்சியை முடித்தனர்

கொழும்பு, ஒக். 5
கடற்படைப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு 730 புதிய கடற்படையினர் நேற்று முன்தினம் காலி கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் இருந்து வெளியேறினர்.

அங்கு இடம்பெற்ற கடற்படை அணி வகுப்பு மரியாதையை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் எச். இ. ஏ. ரி. தெரேஸா ஏற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில் அவர் பேசும் போது "தற்போதைய யுத்தம் எந்தவொரு இனத்தவருக்கும் எதிராக மேற்கொள்ளப்படவில்லை. அடுத்த நூற்றாண்டின் தேவைகளை சமாளிக்கும் வகையில் கடற்படையை நவீனமயப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது" — என்றார். (இ-6)

## கிரிக்கெட் ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக். 5
'ஈஸ்ட் வெஸ்ற்' மார்க்கட்டிங் பிறைவேட் லிமிட்டெட் ஆதரவில் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கம் நடத்தும் 'டேர்க்கி' வெற்றிக் கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இரு கால் இறுதி ஆட்டங்கள் இன்று நடைபெறவிருக்கின்றன.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் வி. க. அணியும், ஸ்ரான்லி வி. க. அணியும் பங்குபற்றும்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் மற்றுமொரு ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் வி. க. அணியும், யாழ். பல்கலைக்கழக அணியும் மோதவிருக்கின்றன.

மானிப்பாயில் நடைபெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணி வீரர்கள், ரசிகர்கள் செல்வதற்கான விசேட பஸ் இன்று காலை 8.00 மணிக்கு [illegible] முன்பாகவிருந்து புறப்படும். (இ-3)

## 17 வருட கால...

(முதலாம் பக்கத் தொடர்)

குதலை ஆரம்பித்திருந்தனர்.

இவற்றில் நான்கு நிலையங்கள் புலிகளிடம் வீழ்ச்சி அடையவே ஏனைய மூன்று நிலையங்களில் படையினர் தாக்குப் பிடித்த வண்ணம் இருந்தனர்.

இவற்றிலும் ஒன்று புலிகளிடம் வீழ்ச்சி அடையவே, மற்றைய இரு நிலையங்களும் தானாகவே வீழ்ச்சி அடைந்தன.

ஞாயிற்றுக்கிழமை நிலைமை மோசமடைய ஆரம்பித்தது. அப்பொழுது புலிகள் பெரும் எண்ணிக்கையில் கிளிநொச்சிக்குள் நுழைந்திருந்தனர். படையினர் ஒருபகுதியில் இருந்து தந்திரோபாயமாக பின்வாங்கினர்.

ஒரு கட்டத்தில் பாதுகாப்புக் கருதி 400 மீற்றர் - 1500 மீற்றர் விஸ்தீரணம் கொண்ட குறுகிய பகுதி ஒன்றுக்குள் படையினர் முடங்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. அப்பொழுது இடம்பெற்ற மோட்டார் தாக்குதல்களிலும் படையினரில் பலர் கொல்லப்பட்டனர்.

### மேலதிக படை அனுப்பும் முயற்சி தோல்வி

அப்பொழுது கிளிநொச்சிக்கு ஆனையிறவுப் பகுதியில் இருந்து மேலதிக படையினரை அனுப்ப முயற்சி எடுக்கப்பட்டது.

கிளிநொச்சியில் சிக்கியிருந்த 54 ஆவது படைப் பிரிவின் பிரதம அதிகாரியின் ரேடியோ தொடர்பு சாதனம் அதிர்ஷ்டவசமாக இயங்கிக் கொண்டிருந்ததால் ஆனையிறவில் உள்ள படை அதிகாரிகளுடன் அவரால் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தது.

புலிகள் பாதுகாப்பு நிலைகள் இருந்த பகுதிகளில் அகழிகளை வெட்டி விட்டிருந்தபடியால் மீட்பு படைகளின் நகர்வு 4 மைல் தூரத்துக்கப்பால் நின்றுவிட்டது.

வெளியான பகுதிகளை மீட்புப் படைகள் கடக்க வேண்டி இருந்ததால் புலிகளின் மோட்டார் தாக்குதல்கள் அதிக சேதங்களை ஏற்படுத்தி இருந்தன.

### படைகளை வாபஸ் பெறமுடிவு

திங்கள் மத்தியானம் கிளிநொச்சியைக் கைவிட்டு பரந்தனுக்கு படைகளை வாபஸ் பெறும் முடிவு எடுக்கப்பட்டது.

படையினர் தமது சொந்த உடைமைகளைக் கூட எடுத்துச்செல்ல முடியாத நிலையில் பின்வாங்கிச் சென்றனர். திங்கள் மாலை அவர்கள் பரந்தனை அடைந்தனர்.

கிளிநொச்சி சண்டையில் எத்தனைபேர் இறந்தனர்?

பரந்தனில் எத்தனைபேர் இறந்தனர்?

மாங்குளம் நகரைக்கைப் பற்ற கடந்த 28 ஆம் திகதி நடத்தப்பட்ட சண்டையில் எத்தனைபேர் இறந்தனர்?

காயம் அடைந்த நிலையில் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்தோர் எத்தனைபேர்?

இவை எல்லாம் வெளி உலகுக்குத்தெரியும். ஆனால் பத்திரிகைத் தணிக்கை காரணமாக உள்நாட்டு மக்களுக்குத்தெரியாது.

இந்த சண்டைகளில் 663 படையினர் இறந்ததாகபாதுகாப்பு அமைச்சின் இராணுவ தலைமையகம் தெரிவித்தது.

ஆனால் இது பூசி, மெழுகி தரப்பட்ட புள்ளிவிவரமே.

முதலில் 200 படையினர் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது; பின்னர் 400 படையினரின் சடலங்கள் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவிடம் இருந்து பெறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் பின்னர் 63 படையினர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. படையினருக்கு ஏற்பட்ட உயிரிழப்பு தொடர்பாக அரசாங்கம் இதுவரை உத்தியோக பூர்வமாக அறிவிக்கவில்லை.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவினர் மல்லாவியில் வைத்துப் பொறுப்பேற்ற படையினரின் சடலங்களை 25 லொறிகளில் ஏற்றி வவுனியா - மன்னார் வீதியில் உள்ள பூவரசங்குளத்துக்கு அனுப்பியிருந்தனர்.

முல்லைத்தீவில் படையினருக்கு ஏற்பட்ட இழப்பை விட இது மோசமான இழப்பாகும்.

முல்லைத்தீவில் படையினர் 26கோடி ரூபா பெறுமதியான இராணுவ தளபாடங்களை இழந்திருந்தனர்.

முல்லைத்தீவில் கொல்லப்பட்ட படையினரின் பட்டியலை அரசு இன்னும் காணாமற்போனோர்பட்டியலில் வைத்திருக்கிறது.

இப்படி இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

(இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளிநொச்சியில் இழந்த...

(முதலாம் பக்கத் தொடர்)
உச்சக் கட்ட மகிழ்ச்சியில் நாடு உள்ளது.

இந்த நகரைக் கைப்பற்றுவதுஇலகுவானதாகஇருக்கவில்லை. உயிரைப் பணயமாக வைத்துப் போராடியதால் தான் இந்த பெறுபேறைப் பெற முடிந்தது. இந்த வெற்றிக்காகபடையினருக்கு நன்றி தெரிவிக்க வேண்டிய கடமை நாட்டு மக்களுக்கு உரியது.

மாங்குளம் வெற்றியிலும் கிளிநொச்சித் தாக்குதலிலும் உயிரிழந்தவர்கள் கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்.

யுத்தத்தில் வெற்றியை மட்டும் எதிர்பார்க்க முடியாது; பின்னடைவுகளையும் தோல்விகளையும் சந்திக்க நேரிடும்.

சில நேரங்களில் எதிர்காலத்தில் ஈட்டக்கூடிய வெற்றிகளுக்காக பின்னடைவுகளையும், யுத்தமுனைகளில் மாற்றங்களையும் செய்ய நேரிடும். இவ்வாறான நிலை யுத்தத்தில் இயற்கையானதே.

கிளிநொச்சி நகர் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்த படையினருக்கு மிக உயர்ந்த கௌரவத்தை அளிக்கிறேன்.

இந்த யுத்தம் பயங்கரமானதும், கொடூரமானதுமாகும். உயிரிழப்புக்கள் எதிர்பார்க்கக்கூடியதே; எமது வீரம் மிக்கபடையினர் இதை உணர்ந்துள்ளனர்.

இந்த உயிரிழப்பில் அரசியல் லாபம் பெறுவதற்கு முயற்சி மேற்கொண்டுள்ள சதிநாசக் கும்பல்கள் குறித்து இச்சந்தர்ப்பத்தில் எச்சரிக்கையாக நடக்குமாறு மக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

யுத்தமும் இனப்பிரச்சினையும் தொடர்ந்து நீடித்துச் செல்வதைக் குறி வைத்து இந்தச் சதிநாச கும்பல்கள் படையினரின் இழப்புகளை வைத்து அரசியல் லாபம் தேடும் மிகக் கேவலமான முயற்சியில் ஈடுபட்டுள்ளன. மக்களின் உணர்வை மறந்து இனவாதத்தீயை மீண்டும் மூட்ட முயற்சிக்கிறார்கள் —

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


இதோ வந்துவிட்டன!
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
**தீபாவளி வாழ்த்து மடல்கள்**
(தெய்வ, சினிமா வடிவங்களில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
✠ வியாபாரிகளுக்கு விசேட கழிவு
வழங்கப்படும்
**மக்மிலன் புத்தகசாலை**
இல. 3, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.
(சி/4749)



**பாராட்டுகின்றோம்**

பட்டங்களால் பெறுநர் பெருமையுறுவதுண்டு;
பெறுநரால் பட்டம் பெருமைப்பட்டதை
நேற்றே கண்டோம்.
இந்த நூற்றாண்டின் தலைசிறந்த
சமய ஃ சமூகப் பணியாளரான
கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
அவர்களை
போற்றி வாழ்த்துவதில் பேருவகையடைகின்றோம்.
**துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்**
பஸ்நிலையம் முன்பாக, சுன்னாகம்.
(சி/5084)


## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்)
தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரும் பட்சத்திலேயே தம்மால் பணியாற்ற முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)

## திருத்தம்

நேற்றைய உதயனின் 9ஆம் பக்கத்தில் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியை வாழ்த்திப் பிரசுரமான விளம்பரத்தை வெளியிட்டவர்கள்

யாழ்ப்பாணம்
சேக்கிழார் கழகத்தினர்

ஆவார். சேக்கிழார் கழகம், மானிப்பாய் என்பது தவறாகும்.

## விமானத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)
வித்தனர்.

விமானத்தைத் தேடும் பணிக்கு விடுதலைப் புலிகள் இன்னமும் அனுமதி வழங்கவில்லை என்றும்—

இவ் விடயமாக விடுதலைப் புலிகளுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மற்றும் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் ஆகியவற்றின் அதிகாரிகள் பேச்சுக்கள் நடத்தி வருவதாகவும்— மன்னார்ச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் இராணுவக் கட்டுப்பாடற்ற மடுப் பகுதிக்கு அதிகாரிகள் சகிதம் சென்றிருந்த மன்னார் அரச அதிபர் நேற்று மாலை மன்னார் திரும்பினார்.

அவர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் பேசி வருவதாக கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-6-21)

## விமான சேவை..,

(முதலாம் பக்கத் தொடர்)
களில் இருந்து வந்த பலர் யாழ்ப்பாணம் செல்ல முடியாது கொழும்பில் தங்கி இருப்பதாகவும்— மொனறா ஏயர் லைன்ஸ் தலைவர் மேலும் கூறினார்.

வடக்கில் உள்ள படையினருக்கு தமது விமானத்தில் ஆயுதங்கள், வெடி பொருள்கள் எதுவும் எடுத்துச் செல்லப்படுவதில்லை என்றும்—

ஆனால் படைத்தரப்பு கோரும் பட்சத்தில் சிவில் உடையில் பாதுகாப்புப் படையினரை "சார்ட்டட்" அடிப்படையில் ஏற்றி இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

## மாங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)
★ ஆயிலன் (முருகன் சதியசீலன் -முத்தையன்கட்டு)

★ ஹரிதரன் (பேரின்பம் அரசரத்தினம் - மட்டக்களப்பு)

★ அறவாணன் (தியாகராஜா செல்லக்குமார் - மட்டக்களப்பு)

★ முரளிதாசன் (ரங்கசாமி கௌரிதாசன் - மட்டக்களப்பு)

★ இன்பம் (கணேஷ் ரதி — விஸ்வமடு) (இ-9)

## வவுனியாவில்.:.

(முதலாம் பக்கத் தொடர்)
சோதனைகளை மேற்கொண்டிருந்தனர்.

மாங்குளம் யுத்தமுனையில் இருந்து முக்கிய அதிகாரிகளை அழைத்து வரச் சென்ற வானூர்தி அணியே தாக்குதலுக்கு இலக்கானது என்றும்—

இந்த கண்ணிவெடித் தாக்குதலில் உயிரிழந்த பொதுமகன் முத்தையா நடராசா (45 வயது) என அடையாளம் காணப்பட்டார் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த அதிரடிப் படைச் சிப்பாய் விடுமுறையில் தமது இருப்பிடத்துக்கு திரும்பிச்செல்வதற்காக வாகனத்துக்குக் காத்திருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் தேடுதலின் போது இரு கிளைமோர் குண்டுகளைக் கைப்பற்றியதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)
பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேளாதவர் போன்று இருந்தார் என்றும் —

பின்னர் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி அதே கேள்வியை மீண்டும் எழுப்பியபோது, இறுதியாக நடந்த சண்டையில் 168 படையினர் இறந்ததாகக் கூறிவிட்டு அனுருத்த இருந்துவிட்டார் என்றும் கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது. மாங்குளம் வீழ்ச்சியடைந்ததுடன் யுத்தம் இறுதிக் கட்டத்துக்கு வந்துள்ளது என்று அந்தக் கூட்டத்தில் ரதிவத்த மேலும் கூறினாராம்.

இதற்கிடையில் ஐ. நா. கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்ற ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, நியூயோர்க்கில் இருந்து கொன்கோர்ட் விமானத்தில் லண்டன் சென்றுள்ளார்.

லண்டனில் தமது மகள் யசோதராவை பல்கலைக்கழகம் ஒன்றில் சேர்த்துவிட்டு அவர் இலங்கை திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)


சங்கானையில்!
# ராகம்ஸ் பட்டுச்சோலை
வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!!
★ **மங்களகரமான திறப்புவிழா** ★
யாழ். குடாநாட்டிலேயே புடைவை விற்பனையில் நீகாற்றதும் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் எண்ணற்ற
வாடிக்கையாளர்களையும் தன்னகத்தே கொண்டு —
யாழ். நகரில் நவீன ஆடைவகை விற்பனையில் மங்காப்புகழை எட்டியுள்ள

**ராகம்ஸ் பட்டுச்சோலை**

நிறுவனத்தாரின் மற்றுமோர் உன்னத படைப்பு!
சங்கானை பிரதான வீதி, பஸ்நிலையத்திற்கு அண்மையாக ராகம்ஸ் பட்டுச்சோலையின்
**கிளை நிறுவனம் இன்று முதல் குதூகல ஆரம்பம்**
இன்று நண்பகல் 12-02 - 1-05 மணிவரையுள்ள சுபவேளையில் திறப்புவிழா நடைபெறும்
என்பதை வாடிக்கையாளர், நண்பர்களுக்கு பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கும்

ராகம்ஸ் பட்டுச்சோலை
24, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ராகம்ஸ் பட்டுச்சோலை
கிளை நிறுவனம்
பிரதான வீதி,
சங்கானை.
[பஸ்நிலையத்திற்கு அண்மையாக]

★ தீபாவளியை முன்னிட்டு ... விசேட கழிவு உண்டு. ★
(சி/5067)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 5-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.